[..]tered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU








[மு]ரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 18 சனிக்கிழமை (01.06.2013) பக்கங்கள் 20 ஓசை - 244




10



12



13



17



18

# [பு]லிகளின் சர்வதேச வலையமைப்பை முடக்க கைகொடுக்கிறது அமெரிக்கா



(கொழும்பு)

தொடர்ந்தும் முழு வீச்சுடன் [செ]யற்பட முனையும் புலிகளின் [சர்]வதேச வலையமைப்பை முடக்[கு]வதற்குத் தேவையான ஒத்து[ழை]ப்பை இலங்கை அரசுக்கு [வ]ழங்குவதற்கு அமெரிக்க இரா[ஜா]ங்கத் திணைக்களம் கொள்[கை]யளவில் இணக்கம் தெரி[வி]த்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான தீவிரவாதம் தொடர்பான நாடுகளின் அறிக்கையிலேயே இது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2009 இல் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதி ஆதர்வு வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருவது குறித்து இலங்கை கவலை கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளினது என்று குற்றம்சாட்டப்படும் நிதி அமைப்புகளை இலக்கு வைத்து பல தீவிரவாத முறியடிப்பு செயற்பாடுகளை இலங்கை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற பிரதேசங்களில், இலங்கை 2012 ஆம் ஆண்டில் பலமான இராணுவத்தை பராமரித்து வந்ததாகவும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீள எழுச்சி கொள்ளும் சாத்தியம் குறித்து குரல் எழுப்பப்படுவதாகவும் அமெரிக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் எச்சங்களை முற்றாக அழிப்பதற்கு தீவிரவாத முறியடிப்பு சட்டங்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம், உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களம், பாதுகாப்புத் திணைக்களம், போன்றவற்றுடன் இலங்கை அரசு தனது கடல்சார் எல்லைப் பாதுகாப்பிலும சர்வதேசரீதியாக செயற்படும் புலிகளின் வலையமைப்பை உடைப்பதிலும் இணைந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினைக்கான தீர்வை 13 ஆவது திருத்தம் பெற்றுத்தராது

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் பிரச்சினைக்கான தீர்வை 13 ஆவது திருத்தம் ஒருபோதும் பெற்றுத்தரப் போவதில்லை என்றும் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் 13 ஆவது திருத்தத்தை மறைத்து விட்டு நியாயமான முறையில் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சிந்திக்க முன்வரவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தமிழ் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள பதில்கள் வருமாறு,

கேள்வி: 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நீங்கள் இப்போது பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு வருகிறீர்கள். இதைப பற்றி சற்று விளக்குவீர்களா?

பதில்: இல்லை. நான் யதார்த்தமான சில விடயங்களைத்தான் கூறிவருகின்றேன். தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கும், 13 ஆம் திருத்தச் சட்டமூல அமுலாக்கத்துக்கும் என்ன தொடர்பு என்பது தான் .நான் எழுப்பும் சாதாரண கேள்வி. இதற்கு உகந்த பதிலை எவராவது சொல்லட்டும். ஒரு பக்கம் நீதித்துறை, சட்டத்துறையில் அரசியல் தலையீடு இருக்



கக்கூடாது என்கின்றனர். மறுபுறம் முதலமைச்சருக்கு பொலிஸ அதிகாரத்தைக் கொடுங்கள் என்கின்றனர். முதலமைச்சர் என்பவர் ஓர் அரசியல்வாதி. அவரிடம் பொலிஸ் அதிகாரங்கள் செல்லுமாயின் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டத்

19 ஆம் பக்கம் பார்க்க

## விமானத்தை வீழ்த்திய புலிகள் மீது வழக்கு

(கொழும்பு)

விமானப்படை விமானத்தை [சு]ட்டுவீழ்த்தியதாக விடுதலைப் [பு]லிகள் இயக்க முன்னாள் [உ]றுப்பினர்கள் இருவர் மீது [அ]நுராதபுர மேல் நீதிமன்றத்தில் [நே]ற்று முன்தினம் வழக்குப் [ப]திவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி வில்பத்து சரணாலயத்துக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது, இலங்கை விமானப்படையின் அன்ரனோவ் - 32 விமானத்தை ஏவுகணை தாக்குதல் மூலம் சுட்டு வீழ்த்தியதாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## [பு]திய சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்று முதல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 வருடங்களின் [பி]ன்னர் யாழ். மாவட்டத்தில் புதி[தா]க 328 சமுர்த்தி அபிவிருத்தி [உ]த்தியோகத்தர்களுக்கு வைபவ [ரீ]தியாக நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்[டி]ன் தலைமையில் இந்நிகழ்வு [இட]ம்பெறவுள்ளது. தெரிவுசெய்[ய]ப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி [உ]த்தியோகத்தர்களுக்கான நிய[ம]னக் கடிதங்கள் இன்று காலை [9.]30 மணிக்கு யாழ். வீரசிங்கம் [ம]ண்டபத்தில் நடைபெறும் நிகழ்[வி]ல் வைத்து வழங்கப்படவுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த 1995 ஆம் ஆண்டு ஆட்சியைப் பொறுப்பேற்ற பின் 1996 ஆம் ஆண்டு வறுமைத் தணிப்பிற்கென சமுர்த்தித் திட்டம் உருவாக்கப்பட்டது.

எனினும் அப்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக 1999 ஆம் ஆண்டுமுதல் வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி காரணமாக நியமனங்கள் வழங்கப்பட்டன. எனினும் 2003 ஆம் ஆண்டு முதல் வடபகுதியில் சமுர்த்தி வங்கிகள் உருவாக்கப்பட்டு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு சமுர்த்தி நன்மைகள் வடபகுதி மக்களுக்கும் கிடைத்தன.

இருப்பினும் நாளடைவில்

19 ஆம் பக்கம் பார்க்க

## வேம்பிராயில் வெடிவிபத்து; தொழிலாளர் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வேம்பிராயிலுள்ள கல்குவாரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த இரத்தினம் நரேஸ்குமார் (வயது - 45), மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ரங்கநாதன் (வயது - 47) ஆகிய இருவருமே இவ்வாறு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று நண்பகல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் சமிக்ஞை விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பிரதான சந்திகளில் தானியங்கி வீதிச் சமிக்ஞை விளக்கு குறிகாட்டி (சிக்னல் லைட்) களைப் பொருத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயத்தைக் கையாளுவதற்கு நிபுணத்துவம் பெற்றவர்கள் கொண்ட குழுவொன்று கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ். நகருக்கு

19 ஆம் பக்கம் பார்க்க



நாளைய முரசில் -

கைப்பொம்மை அரசியல்

உள்ளே...

குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

# மின்தடை பற்றிய அறிவித்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை பற்றிய செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்த இன்று சனிக்கிழமை காரைநகர், ஊர்காவற்றுறை, தீவகம் முழுவதும் ஆகிய இடங்களுக்கான மின்தடை இன்று இடம்பெறமாட்டாது. இதே இடங்களில் 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை 08.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரையும் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் மின்தடை அமுல்படுத்தப்படும்

அத்துடன் இதற்கு மேலதிகமாக இன்று சனிக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் தென்மராட்சியில் தபால் கந்தோர் வீதி, பெருங்குளம், மருதடி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# ஜயலத் மறைவிற்கு யாழ். ஆயர் இரங்கல்

முன்னாள் அமைச்சரும் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவுச் செய்தி கேட்டு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இரங்கல் செய்தி ஒன்றைவெளியிட்டுள்ளார். அவ்விரங்கல் செய்தியில்:

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் திடீர் மரணச்செய்தி கேள்வியுற்று மிகுந்த கவலையடைகின்றேன். நீண்ட காலமாக தமிழ் மக்களுக்காகசிங்களப் பகுதியைச் சேர்ந்த கத்தோலிக்கரான இவர் உரிமைக்காகவும், நீதிக்காகவும் நீண்ட காலமாக குரல் கொடுத்து வந்துள்ளார். தமிழ்மக்களின் விடுதலைப் பயணத்தில் சிறப்பாக போர்க் காலங்களில் வன்னிக்குப் பயணங்களை மேற்கொண்டு துன்பப்படும் மக்களின் அவலங்களை நேரில் கண்டும் கேட்டும் அவர்களின்நல்வாழ்வுக்காகவும் நாட்டின் அமைதிக்காகவும் பாடுபட்டு உழைத்தவர் போரின் போது காணாமற் போன பொதுமகளுக்காக எப்போதும் குரல் கொடுத்து வந்தவர்.

மேலும் மருதமடு யாத்திரைத்தலத்தின் மீதும், மடு செபமாலை அன்னையின் மீதும் மிகுந்த பக்தி வணக்கம் கொண்டவராக விளங்கி, ஆலயத்தை அழகுறவைப்பதற்கும் திருத்தலத்தின் பாதுகாப்பைப் பேணவும் இறைமக்களின் திருயாத்திரைகள் மேற்கொள்ளவும் ஊக்கம் கொடுத்தவர்.

இவரின் திடீர் மறைவில் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடுகின்றேன். என அவ்விரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 960 | திகதி 30.05.2013

வெற்றி எண்கள்: 22 33 41 63 | ஆங்கில எழுத்து: O

ஜக்பொட் பரிசு ரூ. 12,924,760/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 12,924,760/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 1,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 500,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 259 | 1,000/= | ரூ. 259,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 463 | 1,000/= | ரூ. 463,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11483 | 60/= | ரூ. 688,980/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5900 | 40/= | ரூ. 236,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150551 | 20/= | ரூ. 3,011,020/= |
| ஆங்கில எழுத்து | 21956 | 20/= | ரூ. 439,120/= |
| | | மொத்தம் ரூ. | 6,597,120/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 704250057-8-48 |
| வவுனியா | 704247367-9-39 |
| கண்டி | 704247044-9-39 |
| காலி | 704254326-3-33 |
| குருநாகல் | 704242709-0-30 |
| ஹம்பாந்தொட்டை | 704240558-6-46 |
| களுத்துறை | 704248356-4-04 |
| அம்பாறை | 704249647-6-46 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,997,120/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 1,32,19,060/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.06.03 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333646/7

(C/2806)



## வாழ்க வளமுடன்

பெயர் : சு.சாருசன்
முகவரி : 7ஆம் வட்டாரம், நயினாதீவு.
அகவை 9 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





## பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்றிய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களையும், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன் தோழர்) அவர்களையும், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல் தோழர்), அவர்களையும், ஈ.பி.டி.பி.யின் வேலணைப் பிரதேச அமைப்பாளரும், வேலணை பிரதேசசபைத் தவிசாளருமான சி.சிவராசா (போல் தோழர்) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.





புதிதாக சமுர்த்தி நியமனம் பெறும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்
வேலணை பிரதேசம்

(C/2533)



தேசிய மாணவர் படையணியின் 20 ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வு நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும், மாணவர்களின் நடன நிகழ்வையும் காணலாம். (படங்கள்: கே.நந்தகுமார்)

# கலைகளை வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## கம்பவாரிதி ஜெயராஜ்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரக் கலை தமிழகத்திற்கு இணையாக உயர்நிலையில் இருக்கிறது. இதைப்போன்று ஏனைய கலைகளையும் வளர்த்தெடுக்க வேண்டுமென கம்பவாரிதி இ.ஜெயராஜ் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழைப் படித்ததால் நாம் இன்று மிக உயர்ந்த நிலையில் இருக்கிறோம். யாழ்ப்பாணத்து இளைஞர்களை இன்றைய பெற்றோர் பொறியியலாளராக்க வேணடும், மருத்துவராக்க வேண்டும், நல்ல உத்தியோகம், நல்ல சீதனம் வாங்கலாம் என்றுதான் நினைக்கிறார்கள். தமிழைப் படிக்க யார் அனுமதிக்கிறார்கள்.

தமிழால் உயர்ந்து நிற்கும் எங்களைப். பாருங்கள். உங்கள் பிள்ளைகளையும் தமிழ் படிக்க வழிப்படுத்துங்கள். இந்திய அறிஞர்களே வியந்து போற்றுமளவிற்கு தமிழறிஞர்கள் வாழ்ந்த இடம் யாழ்ப்பாணம். மீண்டும் யாழ்ப்பாணம் தமிழறிஞர்களால் நிரம்பவேண்டும்.

1995 வரை அகில இலங்கைக் கம்பன்கழகம் யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் கமபன் விழாக்களை நடாத்தியது. யாழ்ப்பாணத்தில் கம்பன் கழகம் சிறந்த பேச்சாளர்களை உருவாக்கியுள்ளதென்பதையிட்டுப் பெருமைப்படுகிறோம்.

எதிர்பாராத வகையில் நாட்டில் ஏற்பட்ட சம்பவங்களால் 18 வருடங்களின் பின் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா எழுச்சி பெற்றுள்ளது.

1995 வரை நெருப்பின் மத்தியில் வாழ்ந்தோம். கம்பனைப் போற்றியதால் வாழ்வில் உயர்ந்தோம், எம்மோடு கம்பன் பணி செயத இளைஞர்கள் எல்லோருமே ஏதோ ஒருவகையில் இன்று வாழ்வின் உச்ச நிலையில் விளங்குகிறார்கள்.

கம்பனைத் தொட்டவர்கள் தோற்றதில்லை. எனவே, கம்பனைப் படியுங்கள், கம்பனைப் பின்பற்றுங்கள், வாழ்வில் உயர் நிலையை அடையுங்கள் என்று குறிப்பிட்டார். (10)

# ஒளிராத மின்விளக்குகள் சிரமத்தில் போக்குவரத்து

(அச்சுவேலி)

தம்பாலைச் சந்தியில் முன்னர் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் கடந்த சில நாட்களாக ஒளிராமல் உள்ளதால், சந்திப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ள நிலையில் விபத் துக்கள் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்தில் ஈடுபடும் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கனரக வாகனங்களும் இ.போ.ச பஸ்களும் பயணிக்கும் இந்த வீதியில் மின் விளக்குகள் இல்லாமையால் இரவில் போக்குவரத்தில் ஈடுபடுவோர் அச்சத்துடனேயே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளில் பயணத்தை மேற்கொள்வோர் எதிரில் வரும் வாகனத்தின் ஒளியினால் செல்லவேண்டிய வீதிப்பகுதி தெளிவில்லாததால் நின்று நிதானமாக செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே, பயணிகள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஒளிராத மின் விளக்குகளைச் சீர்செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(ஆனைக்கோட்டை)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகரில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையத்தால் தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் வீட்டு மின்னிணைப்பு தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், முச்சக்கரவண்டி திருத்தல், மோட்டார் சைக்கிள் திருத்தல், கட்டடவினைஞர், தையல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விணணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, வலந்தலை, காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய இணைப்பாளர் வேஸ்ரீகு. கன அறிவித்துள்ளார். (104)

# உருத்திரா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு



(அராலி)

சங்கானை உருத்திரா சனசமூக நிலையமும், முன்பள்ளி முகாமைத்துவக் குழுவும் இணைந்து நடாத்திய உருத்திராமுன் பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் தலைவர் சி.சபேசன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் சி.பவானி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. வலிகாமம் வலயப் அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினருமான சிவகுருபாலகிருஷ்ணன, கௌரவ விருந்தினராக யா/சித்தன்கேணி கணேச வித்தியாலய அதிபர் செல்வி.நா.ஜெயராணி, சிறப்பு விருந்தினராக் சே.செல்லக்குமார், து.கிருபாகரன், சி.தயாபரன், திருமதி. குமரகுரு வலிதாம்பாள், க.புஸ்பராசா, செல்வி. நா.நிரஞ்சனா, திருமதி.உ.கிருஷ்ண பவானி, திருமதி. யோ.கேமநளினி, திருமதி.இ.ஜெயக்குமாரி, திருமதி.ஜெஅஜந்தாமதி, ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் சின்னஞ்சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தின்ர்களை வரவேற்க விளையாட்டு நிகழ்வு இனிதே ஆரம்பமாகியது தொடர்ந்து பிரதம விருந்தினர் சிவகுரு பாலகிருஷ்ணன் தனது உரையில், முன்பள்ளியின் முன்னேற்றதுக்கு தன்னாலான உதவியை செய்து வருவதாகவும் இனிவரும் காலங்களில் செய்து தருவதாகவும், உறுதியளித்துள்ளார். இவ் விளையாட்டுப்போட்டிக்கான பரிசில்களை இவரே கொடுத்து உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது விளையாட்டு சிறார்களுக்கு பரிசில் வழங்கலுடன் விழா நிறைவுபெற்றது. (180)

# சுகாதாரமற்ற முறையில் பலாப்பழ வியாபாரம்

(கொடிகாமம்)

யாழ். நகரப்பகுதி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள சந்தைகளில் தற்போது பலாப்பழ வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

சந்தைகளில் மட்டுமல்லாது பலசரக்கு கடைகளிலும், பலாப் பழம் வியாபாரம் அதிகளவில் இடம் பெற்று வரும் நிலையில் துண்டுகளாக வெட்டி விற்பனை செய்யப்படும் பலாப் பழங்கள் சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

வீதியோரமாக உள்ள கடைகளிலும் மக்கள் அதிகம் கூடும் சந்தைகளிலும் துண்டுகளாகப் வெட்டி பலாப்பழ விற்பனை செய்யப்படுவதால் அவற்றில் தூசுகள் படிந்து ஈக்கள் மொய்ப்பதுடன் சுகாதாரமற்றதாக காணப்படுகிறது.

இதனைவிட சில கடைகளில் பலாப்பழ சுளைகளைப் பிடுங்கி சிறிய பைகளில் போட்டும் விற்பனை செய்வதாகவும், இவையும் சுகாதாரமானதாக இருக்குமா என நுகர்வோர் சந்தேகம் கொள்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (150)

# ஆலயம் புனருத்தாரணம்

வேலணை வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவ சேனாசமேத முருகப்பெருமான் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இவ்வாலயத்தில் புனருத்தாரன பணிகளாக ஆலய மேற்கு வடக்குப் புற கொட்டகை அமைதல, சுவர்ப்பகுதி வர்ணம் பூசுதல், பாலஸ்தாபனம் செய்தல், மூலஸ்தான கட்டுமாணம் மீள் நிர்மாணம் செய்தல், தேர்க்கொட்டகை அமைத்தல், கும்பாபிஷேகம் செய்தல் போன்றன மேற்கொள்ளப்படவுள்ளன.

முருக அடியார்கள் இவ் ஆலய திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவிகளை வழங்கமுடியும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். 21)

# 20 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு அமைத்துக் கொடுப்பு

(மல்லாவி)

மல்லாவி தேறாங்கண்டலில் இராணுவத்தில் இணைந்த யுவதி ஒருவருக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

விக்கினேஸ்வரன் சத்திய கௌரி என்பவருக்கே இந்த வீட்டினை இராணுவத்தினர் கட்டிக் கொடுத்துள்ளனர்.

மாபிள்கள் பதிக்கப்பட்டு நவீன வசதிகளுடன் இவ் வீடு அமைக்கப்பட்டுள்ளது. வீட்டுத் திறப்பு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ர)

கண் பார்வை மூலம் சிறந்த பொருளை எடுப்பது போல பகுத்தறிவு மூலம் சிறந்த கருத்துகளை அறியலாம்! - அரிஸ்டோட்டில்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அறிவைத் தோண்டும் மொழியாக...

விலங்குகளெல்லாம் தமக்கு வேண்டிய இரைக்காகவே இன்னொரு உயிரைக் கொல்லுகின்றன. மனிதர்கள் மட்டும்தான் கொல்லுவதில் உள்ள சந்தோஷத்திற்காகவும் கொல்லுகிறார்கள். உண்மைதானே! சக மனிதர்களைக் கொல்லும்போதாவது சட்டம், பொலீஸ், சிறை போன்றன ஞாபகத்திற்கு வருவதால் தயக்கமும் சிறிய குற்றவுணர்வாவதும் ஏற்பட வாய்ப்புண்டு.

விலங்குகளை நாம் கொல்லும்போது அந்தக் குற்ற உணர்ச்சியும் இருப்பதில்லை. நாம் பேசும் மொழியை அவை பேசுவதில்லை; அதனால்தான் மனச் சங்கடமெதுவுமின்றிக் கொன்றுவிட முடிகிறதா? அப்படியெனில், இந்த மொழியில்தான் இருக்கிறதா வன்முறை? என்று ஓர் அறிஞர் கேட்டார்.

மொழியின் காரணமாக உலகம் முழுவதிலும் பல போர்களும் பல இலட்சக்கணக்கான கொலைகளும் நடந்திருப்பது நமக்குத் தெரியும். மொழி வெறும் தொடர்பு ஊடகம் என்பதற்கப்பால் மனிதர்களை வேறுபடுத்தி இயக்குவதாகவும், கொடிய வன்முறையாளர்களாக்கி விடுவதையும் நாம் பார்க்கிறோம்.

"நாயைப் பலரும் விரும்புவதற்குக் காரணம், அது தன் நாக்கை ஆட்டாமல் வாலை ஆட்டுவதுதான்" என்று இப்ஸன் சொன்னார். பேச்சினால் ஒருவரைத் தொல்லைக்குள்ளாக்கிச் சித்திரவதைப்படுத்த முடியும் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஒரு புலவனால் அறம் பாடிக் கொன்றுவிட முடியும் என்று பழந்தமிழ் மக்கள் நம்பினார்கள்.

சிலர் தமது நாக்கைக் கடித்துக் கொண்டாலே இறந்துவிடுவார்கள்; அந்தளவுக்கு அவர் நாவில் விஷம் உள்ளது என்று இன்றும் பலர் சொல்லக் கேட்கிறோம். சொல்லுக்கு வேறும் பல ஆற்றல்கள் இருக்கிறது. "எல்லை நீத்த உலகங்கள் யாவையும் என் சொல்லினால் சுடுவேன்; அது தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்" என்று தூதாய் வந்த அனுமனிடத்தில் சீதை சொல்கிறாள்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே என்றெல்லாம் பெருமிதம் கொள்வது இந்த சொல்லின் சுகமும் வேகமும் கண்டுதான். ஆனால் ஒரு மொழியின் தேவை, முக்கியத்துவமெல்லாம் அது பயன்படுகிற தன்மையைப் பொறுத்ததேயாகும். அது எவ்வளவு பெரிய 'இலக்கிய காவியங்களையும்' 'தெய்வீகத் தன்மையையும்' தன்னிடத்தே கொண்டது என்று சொல்லிக் கொண்டாலும், அது மக்களது அன்றாட வாழ்க்கையில், அவர்களது அறிவை வளப்படுத்தும் தன்மையில் எந்த வகையில் உபயோகப்படும்படி இருக்கிறது என்பதையே அளவுகோலாகக் கொண்டு அளக்கப்படுகிறது.

உதாரணமாக, இன்று ஆங்கில மொழி பெரும்பான்மை மக்களால் பேசப்படுகிறது, விரும்பப்படுகிறது என்றால் – அது 'புராதன மொழி' என்பதோ அல்லது 'தெய்வாம்சம் உள்ள மொழி' என்பதோ அதற்குக் காரணம் அல்ல. அதனுடைய உலக உபயோகமும், அது உலக மக்களது அறிவை, வாழ்வை வளப்படுத்த உதவிடும் தன்மையைப் பொறுத்ததுமேயாகும்.

கற்றுக்கொள்ளச் சுலபமாக இருத்தல், இன்றைய அறிவு முன்னேற்றங்களை உடனுக்குடன் உலகின் எந்தக் கோடியிலிருந்தும் பெற்றுக்கொள்ளும்படி இருத்தல்... அறிவைத் தோண்டும் உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமே தவிர சுதந்திரச் சிந்தனைக்கு விலங்கிடும் தன்மையைக் கொண்டிருக்கக் கூடாது. வெறும் அழகை மாத்திரம் கொள்ளாமல், அதன் பயனை... Utility யைக் கணக்கிட்டுத்தான் ஒரு மொழி பாராட்டப்படுகிறது.

தமிழையும் நமது வாழ்வின் பயன்பாட்டுக்குரிய மொழி ஆக்கிக் கொள்வதிலேதான், நம் மொழியையும் நம்மையும் வளப்படுத்தியவர்களாவோம். இன்றைய மாறுதல்களுக்கும் புதுமைகளுக்கும் ஏற்ப எமது மொழியை இசைவுபடுத்தி வெற்றிகண்டவர்களாவோம்.

- ஆசிரியர்

# தெற்கில் மதமாற்றம் குறித்த பேச்சு

# வடக்கு, கிழக்கில் நடப்பது என்ன?

## கேட்கிறார் சுரேஷ் எம்.பி

(கொழும்பு)

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஏனையோரை மதம் மாற்றுவதாக குற்றம் சாட்டுபவர்கள் வடக்குக் கிழக்கில் என்ன செய்கின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை. யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் புதிதாக ஒரு விகாரையேனும் அமைக்கப்படவில்லை எனவும், முடிந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிரூபிக்கட்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் கூறியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"யுத்தத்திற்குப் பின்னர் வடக்கில் கனகராயன்குளம், கிளிநொச்சி நகர், யாழ்.நகர் ஆகிய இடங்களிலும், ஏ - 9 வீதிகளிலும், கிழக்கில் திருகோணமலை நகர், மட்டக்களப்பு நகர் ஆகிய இடங்களிலும் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. மாங்குளத்தில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலையில் விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சங்கமித்தை வந்திறங்கியதாகக் கூறிக்கொண்டு எந்தக் காலத்திலும் இல்லாதளவில் வடக்கு, கிழக்கில் விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. பிற்காலத்தில் அவை வரலாற்றில் இருந்ததாகக் கூறப்படலாம்.

தமிழ் பௌத்தத்தின் பிற்பாடே சிங்களம் வந்தது. பௌத்த மதம் அசோகன் காலத்தில் இருந்தபோது சிங்களம் இருக்கவில்லை. பிற்பட்ட காலத்திலேயே வந்தது. இலங்கை வரலாற்றில் காலியில் சிவன் கோவில் இருந்தது.

எனவே சைவமும், தமிழும் இருந்ததாகக் கூறி நாம் சென்றால் அங்குள்ள சிங்களவர்கள் ஏற்பார்களா? சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ள சீதாஎலிய என்ற இடம் சீதையை இராவணன் சிறைவைத்த இடம். இராவணன் சிவன் பக்தன்.

இதற்கும் பௌத்தத்துக்கும் என்ன சம்பந்தம். எனவே, எல்லாவெல மேதானந்த தேரரின் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நித்திரை கொள்பவர்கள் போல் கண்ணை மூடிக்கொண்டிருப்பவர்களை ஒன்றும் செய்ய மு[illegible]யாது. இவ்வாறான விடயங்க[illegible] அங்கு நடைபெறுவது என்பது உண்மை.

இம்முறை தென்பகுதியில் இல்லாதளவு இராணுவத்தின் வெசாக் கொண்டாட்டங்கள் வடக்கு, கிழக்கில் நடத்தப்பட்டுள்ளன. வீதியில் சென்ற தமிழர்கள் மறிக்கப்பட்டு பானம் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மதம் மாற்றுவதாகக் கூறும் இவர்கள் வடக்கு, கிழக்கில் என்ன செய்கின்றனர்" என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இலங்கையரின் பயன்பாட்டில் கோதுமைக்கு பதில் அரிசிமா

(கொழும்பு)

இலங்கையர்கள் அதிகளவில் அரிசி மாவை நுகர்வதாக வர்த்தக அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். கோதுமை மாவின் நுகர்வு கணிசமானளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டில் தனி நபர் கோதுமை மா நுகர்வு 35.5 கிலோ கிராமாகக் காணப்பட்டதாகவும், 2011 ஆம் ஆண்டில் இது 24.2 கிலோ கிராமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதே காலப்பகுதியில் அரிசிமாவின் நுகர்வானது 94.1 கிலோ கிராமிலிருந்து 117 கிலோ கிராமாக உயர்வடைந்துள்ளது. கோதுமை மாவிற்கு அதிகளவு வரி விதிக்கப்படுவதனால் இவ்வாறு நுகர்வில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# 14 ஆயிரம் இலங்கை பணியாளருக்கு சவுதியில் தற்காலிக கடவுச்சீட்டு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்த 14 ஆயிரம் இலங்கை பணியாளர்களுக்கு நாடு திரும்புவதற்கான தற்காலிக கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

சவுதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ள பொது மன்னிப்பு காலத்தை பயன்படுத்தி நாடு திரும்புவதற்கு ஏதுவாக இவர்களுக்கான தற்காலிக கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களை விரைவில் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவின் குடிவரவு அதிகாரிகளுடன் இணைந்து இவர்களை நாட்டுக்கு திருப்பி அழைப்பதற்கான ஏற்பாடுகளை துரிதகதியில் மேற்கொண்டு வருவதாகவும் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பொது மன்னிப்பு காலத்தில் நாடு திரும்பும் எதிர்பார்ப்பில் இருந்த தமக்கு இந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என சவுதி அரேபிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருசில இலங்கையர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எவ்வித குற்றங்களும் இழைக்காத தம்மை அதிகாரிகள் பல வாரங்களாக தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கும் அவர்கள், இலங்கைத் தூதரக அதிகாரிகள் எவரும் தமது பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு முன்வரவில்லை என அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதிப்பொது முகாமையாளரிடம் வினவியபோது சவுதி அரேபியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களையும் பொது மன்னிப்பு காலத்தில் அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகக் கூறினார்.

எவ்வாறாயினும் ஒரு சிலருக்கு எதிராக அந்த நாட்டில் விசாரணை முன்னெடுக்கப்படுவதால் விசாரணைகள் நிறைவுபெறும் வரை அவர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான வாய்ப்பு இல்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கூறியுள்ளது.

# கழிவுப்பொருட்கள் கொட்டுவதை தடுக்குமாறு கோரிக்கை

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆவரங்கால் கிழக்கு வாதரவத்தை வீதியில் உள்ள கள்ளுத்தவறணைக்கும், தேரம் பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட வீதியோரங்களில் பெருமளவு கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இவ்வீதியால் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கழிவுப் பொருட்கள் வாகனங்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலும் தூர இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கு கொட்டுவதைக் காண முடிகிறது. இவ்விடத்தில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்படுவதை அடுத்தே கழிவுப் பொருட்கள் இங்கு கொட்டப்பட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கழிவுப் பொருட்கள் கொட்டுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் பலரும் தெரிவிக்கின்றனர். (08)

# இன ஒற்றுமையை வலியுறுத்திய பேராசான் தாவீது அடிகளார்

ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
(இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர்

**ஆழ்ந்த வரலாற்று அறிவும், முப்பத்து மூன்று மொழிகளைக் கற்றுத் தேர்ச்சியும் உடையவருமான தாவீது அடிகளார் தான் மேற்கொண்ட மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையை வைத்துக் கொண்டே இந்நாட்டு மக்களின் பெரும்பான்மையானோர் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் ஒரே மூல மொழியைத் தாயாகக்கொண்டிருந்தன. அதாவது இரட்டையர் ஆகப் பிறந்தன என்று சுட்டிக்காட்டி இன, மொழி பேதங்களற்ற ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதையே தனது கோட்பாடாகக் கொண்டிருந்தவராவர்.**



பல்வேறு காலங்களில் பற்பல மேதைகள் எம்மிடையே தோன்றி வாழ்ந்து மறைந்தாலும் அம்மேதைகளின் பெறுமதிமிக்க கருத்துக் கருவூலங்களை அவர்கள் தமது அழியாச் சொத்தாகவிட்டுச் சென்றுள்ளனர். அவற்றின் பெறுமதி-களை எடைபோட்டு மீண்டும் மீண்டும் அசைபோட்டுப் பார்ப்போமாயின் இன்றைய கால கட்டத்தில் எமது நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவை எமக்குச் சிறந்த வழி-காட் டல்களாக, அறிவுரைகளாக, ஆலோசனைகளாக அமைகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மேலைத்தேய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் பிடிகளிலிருந்து 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின் இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து ஆட்சியை நடாத்திய அரசுகள், தெளிந்த சிந்தனையோடு கூடிய அரசியல் கோட்பாடுகளையும் கொள்கைத் திட்டங்களையும் வகுத்துக் கடைப்பிடிக்கத் தவறியமையாலேயே இலங்கையின் இனமொழி, மத, சாதி, சமூகப் பிரச்சினைகள் உருவெடுத்த கால கட்டத்தில் வாழ்ந்து வந்தவரே மறைந்த அருட்தந்தை கலாநிதி ஹயசிங் சிங்கராயர் தாவீது (டேவிட்) அடிகளாராவர்.

தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இலங்கையில் 1950களுக்குப் பின் உருவெடுத்த இன, மத, மொழிப் பிரச்சினைகளின் பின்னணியையும், சூழ்நிலையையும், களநிலையையும் புரிந்து கொண்ட தாவீது அடிகளார் தெளிவும், பகுத்தறிவும், புலமையும், சிந்தனை சக்தியும், நுண்மதிப்பும் உடையவராய் விளங்கியமையினால் பற்பல அரிய, சீரிய கருத்துக்களைதான் எழுதிய நூல்களிலும், கட்டுரைகளிலும் வெளியிட்டார். அவர் எழுதிய பதிப்பித்து வெளியிட்ட ஆராய்ச்சி நூல்கள், சிற்றேடு கள், கட்டுரைகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் உள்ளன. அவற் றுள் ஒன்று We Stand Toe என்று பெயரிடப்பட்டு ஞானம் தாவீது சங்கம் என்ற அமைப்பின் அனுசரணையுடன் ஆங்கில மொழியில் 1978ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வெளியிடப்பட்டது. அச்சிற்றேட்டின் 146ஆம் பக்கத்தில் பின்வருமாறு உள்ளது. நாம் அன்புக்காகவே நிற்கிறோம். தொண்ணூறு சதவீதத்திற்கு மேலான இலங்கை வாழ் மக்கள் ஒரே இனம், ஒரே மூலமொழியை உடையவராய் இருந்தபோதும் இலங்கையில் இனங்கள், சாதிகள், மொழிகள் அரசியற் கட்சி கள் முதலியனவற்றின் அடிப்படையில் பகைமையே நிலவுவது கவலைக்குரியதாகும்.

ஆழ்ந்த வரலாற்று அறிவும், முப்பத்து மூன்று மொழிகளைக் கற்றுத் தேர்ச்சியும் உடையவருமான தாவீது அடிக-ளார் தான் மேற்கொண்ட மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையை வைத்துக் கொண்டே இந்நாட்டு மக்களின் பெரும்பான்மையானோர் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் ஒரே மூல மொழியைத் தாயாகக்கொண்டிருந்தன. அதாவது இரட்டையர் ஆகப் பிறந்தன என்று சுட்டிக்காட்டி இன, மொழி பேதங்களற்ற ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதையே தனது கோட்பாடாகக் கொண்டிருந்தவராவர்.

தான் வாழ்ந்த கால இலங்கையில் ஆரியர் மற்றும் திராவிடர் என்ற இனப்பாகுபாடு கூறும் பேதங்களும் சிங்களம் மற்றும் தமிழ்மொழியை பேசும் மக்களிடையே குரோதங்களும், துவேஷங்களும் தலைவிரித்தாடியதன்ட விளைவாக இலங்கையிலேற்பட்ட இன (அல்லது சமூக குழு) மொழிக் கலவரங்கள் 1958, 1977ஆம் ஆண்டுகளில் வெடித்ததனால் சொல்லொணாஉயிர்க் கொலைகள், உடமைச் சேதங்கள், பொருளாதாரச் சிதைவுகள் ஏற்பட்டதோடு, நாடு பின்னடைவைச் சந்தித்து பாரிய விளைவுகளை எதிர்கொண்டதைத் தாவீது அடிகளார் தனது நூல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். தீர்க்க தரிசன நோக்குடன் தாவீது அடிகள் எதிர்வு கூறிய அறிவுரைகள் ஒன்று இரண்டல்ல பல உள்ளன. Wes Tamd Tor என்ற சிற்றேட்டின் 09ஆம் பக்கத்தில், இலங்கையில் ஐக்கியம், இசைவு (இணக்கம்) சமாதானம் ஆகியனவற்றின் வழியாகவே வளம் பெருக முடியும் என்பதைத் தனது கொள்கையாகக்கொண்டவர் தாவீது அடிகள் என்பது தெளிவாகின்றது. இவற்றுக்காக அரசாங்கம் தனது போக்கை மாற்றினாலேயே இலங்கையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி ஐக்கிய தேசத்தை உருவாக்கலாம். இதனைச் சொல்லளவில் கூறினால் போதாது செயலிலும் காட்டவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது. இலங்கை ஒரு ஐக்கிய தேசமாக, ஒன்றிணைந்த மண்டலமாக விளங்க வேண்டுமாயின் எம்நாட்டில் புரையோடியுள்ள இன, மத, மொழி, சமூக பேதங்கள் யாவும் அற்ற கோட்பாடுகளே சகல அரசியற் கட்சிகளாலும் மற்றும் சமூக அமைப்புகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப் படவேண்டும்.

இலங்கையின் கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இனப்பாகுபாடுகள், பேதங்கள் ஆகியனவே மக்களிடையே வளர்க்கப்பட்டதன் விளைவாக இந்நாட்டு மக்களிடையே பிளவுகளும், பேதங்களும், துவேஷங்களும் விரிசல்களும் தோன்றியமையால் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இலங்கை வரலாற்றில் ஆரியர், திராவிடர் என்ற இன அடிப்படையில் மக்களை இன ரீதியாகப் பிரித்துக்காட்டியதோடு சிங்களவர் ஆரிய இனத்தவர் என்றும், தமிழர் திராவிட இனத்தவர் என்றும் முத்திரை குத்தப்பட்டு அழுத்திக் கூறப்பட்டமையினாலேயே ஐக்கிய இலங்கை உருவாகுவதற்குகத் தடை ஏற்பட்டது. தாவீது அடிகள் தான் மேற்கொண்ட மொழிகளின் ஆராய்ச்சிகள் மூலம் பெற்றுக்கொண்ட முடிவுகளின் படி இவ்விதமான இனப்பாகுபாடுகள் தவறானவை என்று சுட்டிக் காட்டிக் கூறி இலங்கையில் வாழும் சிங்களவரும், தமிழரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என வலியுறுத்தினார்.

தாவீது அடிகள் இலங்கையில் இனங்களுக்கிடையே உடல் கூற்று ரீதியாக வேறுபாடுகள் காணப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது சிங்களவரும் தமிழரும் ஒரேவிதமான உடற்கூற்றுக் கட்டமைப்பைக்கொண்டதினால் அவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இரு இனங்களல்ல என்று இயம்பியுள்ளார். இனவியல் தரவு-களையும், பூர்வ மனித வர்க்கவியல் தரவுகளையும் ஆதாரங்களைக் காட்டி, அக்கருத்தை நிரூபிக்கின்றார். எனவே, இலங்கையில் இனப்பாகுபாடு பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

இவ்வாறு இனம் என்ற சொல்லைப் பயன்படுத்தி அரச, அரச சார்பற்ற தேவைகளுக்காக உபயோகப்படுத்தும் போது சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், இந்திய மற்றும் பாகிஸ்தானிய முஸ்லிம்கள், பறங்கியர், மலேயர், ஆதிப் பழங்குடிகள் (ஜேடர்) என்று பாகுபடுத்திக் காட்டப்படுகின்றது. இதனாலே இனப்பாகுபாடு பேணப்படுகிறதே தவிர இலங்கையர் என்ற ஐக்கிய மனப்பாங்கு உணர்வு ஏற்பட வாய்ப்புக்கிடைக்கவில்லை. இனப்பாகுபாடு மூலம் இனவேற்றுமையே இலங்கையில் நிலவுகின்றது. எனவே, தாவீது அடிகள் சுட்டிக்காட்டுவது போல இனம் என்ற ரீதியில் சிந்திக்காமல் இலங்கையில் வாழும் அனைவரும் இலங்கையரே. எல்லோரும் இந்நாட்டு மக்களே என்று கணித்துக்கொள்ளவேண்டும்.

தற்போது இலங்கையில் மூவின மக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பாகுபடுத்திப் பேசுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உண்மையில் இலங்கை வாழ் மக்களை சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் என்றும், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர் என்றும் மொழி அடிப்படையில் பாகுபடுத்தப்படும்போது சிங்களவர், தமிழர் என்று அழைக்கப்படும் நிலை உருவாகி மொழிப் பிர-யோகம் சம்பந்தமான பிரச்சினைகள் கடந்த காலங்களில் உருவாகின. இந்நிலையிலே தாவீது அடிகள் சிங்கள, தமிழ் மொழிகளுக்கிடையே ஒப்பீட்டு அடிப்படையில் ஒற்றுமைகள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டி இரு மொழிகளும் ஒரு தாயின் பிள்ளைகள் எனக் கருத வேண்டும் என்றும் வலியுறுத்தி மொழிகளின் அடிப் படையில் வேற்றுமை பாராட்டுவது தவறு என்ற அறிவுரையையும் தாவீது அடிகள் வழங்கியது மிகச் சிறப்பானதாகும்.

மேலும், தாவீது அடிகள் மொழிப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக மும்மொழிக் கொள்கையின் அவசியத்தையும் வலியுறுத்தினார். தாவீது அடிகள் செப்பிய கருத்துக்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன. உண்மையில் அவர் தற்போது வாழ்ந்திருந்தால் கற்றுக் கொண்ட பாடங்களும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் காத்திரமான கனமான கருத்துக்களை எடுத்துக்கூறியிருப்பார். எவ்வாறாயினும் தாவீது அடிகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களைப் பின்வருமாறு கொடுக்கலாம்.

இலங்கையர் ஓர் இனத்தவர் என்று சிந்தித்தல் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிடையே மொழியியல் அடிப்படையில் ஒற்றுமை காணல் இலங்கையர் ஒவ்வொருவரும் இவ்விரு மொழிகளையும் கற்றல்.

சமூகக் குழுவாதம், இனவாதம் தலைதூக்காமல் விழிப்பாய் இருத்தல்.

மதவாதங்களோ, பிராந்திய வாதங்களோ தோன்ற இடமளியாதிருத்தல்.

இவ்விடயங்களை அமுல்படுத்தத் தேவைப்பட்ட பொறிமுறைகளை வகுத்துச் செயற்படுத்த ஆவன செய்வது இந்நாட்டின் அரசினதும், சமூக அமைப்புக்களினதும் பொறுப்பாகும். இவை மூலமே இலங்கை ஐக்கியமும், நல்லிணக்கமும் ஒருமைப்பாடும், சமாதானமும், அபிவிருத்தியும் கொண்ட நாடாக வளர்ந்து ஆசியாவில் ஆச்சரியம் மிக்க நாடாகத் திகழ முடியும்.

நாட்டிற்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றிய வரலாற்று அறிஞனும், பன்மொழிப்புலவரும், மொழியியல் ஆய்வாளருமாகிய தாவீது அடிகளாருடன் சில காலம் நெருங்கிப் பழகக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகவே நான் கருதுகிறேன். அவரது 32ஆவது ஆண்டு நிறைவு தினம் யூன் மாதம் 1ஆம் திகதியாகும். அன்றைய தினம் பருத்தித்துறையில் அவர் பிறந்த இடமான தும்பளையும் நினைவு தின நிகழ்வை தாவீது அடிகளார் நினைவு தினக்குழு நடாத்துவதும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

# இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு; வலுவடைய வலியுறுத்தும் சீனப் பிரதமர்



(பீஜிங்)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ நேற்று முன்தினம் சீனப் பிரதமர் லி கிகியாங்கை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

நான்கு நாள் பயணமாக சீனா சென்ற ஜனாதிபதி கடந்த புதன்கிழமை சீன அதிபரை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் சீனப் பிரதமரைச் சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அயல் நட்புநாடுகளான சீனாவும், இலங்கையும் பரஸ்பரம் ஆழமான அரசியல் நம்பிக்கையை கொண்டுள்ளதாக இந்தச் சந்திப்பின் போது, சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பும், வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் மேலும் ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியதன் தேவை குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் வரைவு தொடர்பாகவும் சீனப் பிரதமர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

சுதந்திர வர்த்தக பிரதேசம் ஒன்றை அமைப்பது குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், துறைமுகங்கள். தொடருந்து, நெடுஞ்சாலைகள், போன்ற பிரதான திட்டங்களை விடவும், விண்வெளி ஆராய்ச்சி, கடல்சார் விஞ்ஞானம், கலாசாரம், கல்வி, சுற்றுலா போன்ற துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்புகள் மேலும் விரிவாக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் சீனப் பிரதமர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் கவலையளிக்கும் பிர்தானமான பிரச்சினைகளின் போது ஒன்றுக்கு ஒன்று ஆதரவு அளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு துறைகளில் சீனாவுடனான ஒத்துழைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதால், சீனா இலங்கையின் முக்கியமான பங்காளராகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# வீட்டில் இருந்த தமிழர் கனடாவில் சுட்டுக்கொலை



(ரொரன்டோ)

கனடாவின் ரொரன்ரோ கிழக்குப் பகுதியில் தமிழர் ஒருவர், கடந்த வியாழக்கிழமை மாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வைத்திலிங்கம் சுரேந்திரா என்ற 38 வயதுடையவரே, வியாழன் மாலை 3 மணியளவில் அவரது வீட்டின் பின்புறம் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

மூன்று பேர் அவரது மார்பில் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கனேடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட சுரேந்திரா, தனது மனைவி மற்றும் 4 வயது மகனுடன் பிஞ்ச் அவென்யூவில் வசித்து வந்துள்ளார்.

அவர் தனது பிறந்தநாளை முதல்நாளான புதன்கிழமை கொண்டாடியுள்ளார். இவர் இலக்கு வைத்தே கொல்லப்பட்டதாக பொலிஸார் நம்புகின்றனர்.

சுற்றியுள்ள வீடுகளில் உள்ள கண்காணிப்பு காணொலிப் பதிவுக் கருவிகளில் கொலையாளிகள் மூவரும் பதிவாகியுள்ளனர். அவர்களின் அங்க அடையாளங்களை வெளியிட்டுள்ள பொலிஸார் கொலையாளிகளை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலங்கை வருகிறார் முர்ரே மக்கேலி

நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் முர்ரேமக்கேலி, இந்தியா மற்றும் இலங்கைக்கான விஜயத்தைத் வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை வரவுள்ள நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர், இலங்கை வெளிவிவகார மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டுக்காக வரவுள்ள நிலையில் இலங்கையின் உபசாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பம் ஆகும் எனவும் நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் முர்ரேமக்கேலி தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றம் மீதான நம்பிக்கை; இழந்துவிடக்கூடாது மக்கள்

## - விஜயதாச எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

நீதவான் ஒருவர் அல்லது ஒரு சிலரின் நடவடிக்கைகளினால் நீதிமன்றம் குறித்து மக்கள் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நீதவான் ஒருவர் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்பதே அதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

அண்மையில் ஹோமாகம நீதவான் மூன்று இலட்ச ரூபா லஞ்சம் பெற்றுக் கொள்ள முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவமானது உலக அரங்கில் இலங்கை நீதிமன்றின் நன்மதிப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

நீதிமன்றக் கட்டமைப்பு நேர்மையாக செயற்படுகின்றது என்பது மக்களுக்கு புலப்படக் கூடிய வகையில் இருக்க வேண்டுமென விஜயதாச ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடரும் கைதுகள், தடுத்துவைப்புகள்

## - கனேடிய சட்டத்தரணிகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

இலங்கையில் தொடர்ந்தும் பயங்கர்வாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்ற சூழல் தொடர்கின்றது.

தடுத்துவைப்பதன்போது எவ்விதமான நீதிமன்ற வழிமுறைகளையும் பின்பற்றப்படுவதில்லையென்று கனடாவின் சட்டத்தரணிகள் உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 23 ஆவது கூட்டத் தொடரின் நேற்று முன்தின அமர்வில் இந்த அமைப்பின் பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் சட்டத்தரணிகள் உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி அங்கு மேலும் கூறியதாவது, சட்டவிரோதமான முறையில் குற்றவியல் பிரேரணையொன்றை முன்வைத்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை இலங்கை அரசாங்கம் பதவி விலக்கியது.

அதேபோன்று 19 ஆவது அரசியல் திருத்தத்தை மேற்கொண்டு பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை 5 வருடங்களாக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மறுபுறம் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு கைதுகளும் தடுத்துவைப்புக்களும் இடம்பெறுகின்றன.

எனவே, நீதியின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மீது கவனத்துடன் செயற்பட வேண்டும்.

அதேபோன்று மியன்மார், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறையின் அச்சுறுத்தல் தொடர்பில் மனித உரிமைப் பேரவை கண்காணிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# சிங்கள மக்களை குடியேற்றாமல் வடக்கில் தேர்தல் நடாத்தக்கூடாது

## ஜாதிக ஹெல உறுமய நிபந்தனை

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த வடக்கைச் சேர்ந்த சிங்களவர்கள், மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாத நிலையில் வட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக பாரியளவில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அவதானிப்பதற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர். இதன் போதே அக்கட்சியின் செயலாளர் ஸ்ரீ நிஷாந்த வர்ணசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

அன்று வடக்கில் சிங்களவர்கள் வாழ்ந்த நிலங்களில் இன்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களது. குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் அக்காணிகளுக்கான உறுதிகளும் அவர்களது பெயர்களுக்கே மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், இதற்கு முன்னர் நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த போதும் அங்கு வாழ்ந்த சுமார் 150 சிங்களக் குடும்பங்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் கலந்துரையாடினோம். இதன்போது, அச்சிங்களக் குடும்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அரசாங்க அதிபரும் எம்மிடம் உறுதியளித்தனர்.

ஆனால், அவர்களின் அந்த உறுதிமொழி இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல வடக்கின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வெளியேறிய சிங்களவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் பாரியளவிலான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

# பகிடிவதைக்கு எதிராக கடும் நடவடிக்கை

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை வழங்கும் மாணவர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே சில பல்கலைக்கழகங்களில் பகிடிவதை வழங்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் மாணவர் விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி சுரஞ்ஜித் மாவெல்லகே கூறியுள்ளார்.

பகிடிவதை வழங்கியமை உறுதியாகும் மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி அலுவலர்கள்

# சேவை மனப்பாங்குடன் பணியாற்ற வேண்டும்



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அலுவலர்கள் வறிய மக்களது தேவைகளை அறிந்து சேவைமனப்பாங்குடன் செயலாற்ற முன்வர வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிதாக சமுர்த்தி நியமனம் பெறுபவர்களுடான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பி.கட்சியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அலுவலர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமுர்த்தி நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் நன்நடத்தை உடையவர்களாகவும் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து தமது பிரதேச மக்களின் நலன்களில் கரிசனை கொண்டவர்களாகவும் செயற்பட வேண்டும்.

இப்பணியை பெற்றுக்கொள் பவர்கள் மனச்சாட்சியுடனும், நடுநிலையுடனும் பணி புரிய தயாராய் இருக்க வேண்டும். நீங்கள் பெற்றுக் கொள்ளும் இவ் வேலை வாய்ப்பின் மூலம் நீங்களும், உங்களது குடும்பமும் சுபீட்சமான எதிர்காலத்தைக் பெற்றுக் கொள்கின்றீர்கள்.

மக்களுக்கு நேரடியாக சேவை யாற்றுகின்ற ஒரு பணி என்பதனால் மக்கள் மத்தியில் எமது மக்கள் நல அபிவிருத்திப்பணிகளையும் அரசியல் பணிகளையும் மக்கள் மத்தியில் எடுத்துரைத்து மக்களின் சிந்தனைகளில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் இதனூடாகவே எழுச்சியை நாம் பெறமுடியும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கருத்துத் தெரிவிக்கையில், சமுர்த்தி நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் சிறந்தபயனைப் பெற்றுக் கொள்வதுடன் மக்களது தேவைகளை அறிந்து சேவைமனப் பாங்குடன் செயலாற்ற முன்வர வேண்டும். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவு எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி தகைமை அடிப்படையில் நியாயமான முறையில் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார்

இதன் போது யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன், ஈ.பி.டி.பி.யின் பிரதேச இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சேதமடைந்த வாயில்தூண்கள் விழுமோ என்ற அச்சத்தில் மக்கள்

(வரணி)

வரணிப் பிரதேச வைத்திய சாலையின் வாயிற்கதவின் இரு பக்கத் தூண்களும் 'மிகமோசமான நிலையில் சேதமடைந்துள்ளதுடன் இடிந்துவிழுமோ என்ற அபாய நிலையில் காணப்படுவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தூண்களில் ஒன்று அண்மையில் வீழ்ந்துள்ள நிலையில் தற்போதும் வீதியில் அத்தூண் அகற்றப்படாமல் காணப்படுவதுடன் வைத்தியசாலை வாயில் கதவு பூட்டமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பழமை வாய்ந்த இக்கட்டடத் தூண்கள் முன்னர் கம்பிகள் இன்றிக் கட்டப்பட்டமையால் தற்போது சேதமடைந்த மீதிப்பகுதியும் எப்போது இடிந்துவிழும் என்று தெரியாத நிலை காணப்படுவதாக பொதுமக்களும் நோயாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

பழமையான தூண்களை அகற்றி புதிய தூண்களை நிறுத்தி சீர்செய்ய வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (150)

# தம்பாலை நாச்சிமார் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

தம்பாலை நாச்சிமார் வீதியானது குண்டும் குழியுமான நிலையில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலையில் புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது மண் வீதியாக காணப்படுவதுடன் வீதியின் நடுவே பெரிய குழிகளும் சிறு கற்களும் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பாதசாரிகளும் வாகனங்களில் பயணம் செய்வோரும் பல்வேறு சிக்கல் நிலையை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மழை காலங்களில் வீதியில் நீர் தேங்கி நிற்பதால் வீதி சேறும் சகதியுமாக காட்சியளிக்கின்றது. அத்துடன் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்வோரும் தாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த வீதியினை தார் வீதியாகப் புனரமைத்து பயணிகளின் தடங்கலற்ற போக்குவரத்திற்கு வழி செய்யுமாறு உரிய தரப்பினரை போக்குவரத்தில் ஈடுபடுவோர் கேட்டுள்ளனர். (85)



**நெல்லியடி பொலிஸாரினால் வெசாக் தினநிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்ட போது பொலிஸாரினால் அழகாக அமைக்கப்பட்ட வெசாக் கூட்டைக் காணலாம்.**

**(18)**

## குரும்பசிட்டி குப்பிளான் வீதி புனரமைப்பு எப்போது?

(சுன்னாகம்)

மல்லாகம் சந்தியில் இருந்து சுமார் 5கிலோ மீற்றர் தூரம் வரையான ஏழாலை குரும்பசிட்டி குப்பிளான் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

வீதி குண்டும், குழியுமாக காணப்படுவதால வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர். குறித்த இவ்வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் முதல் தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் பயணங்களை மேற்கொள்கின்ற நிலையில் வீதி திருத்தப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இப்பிரதேசத்தில் பலவீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வீதியையும் புனரமைத்து பொதுமக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# வெங்காய விதைகளைப் பயன்படுத்தும் தென்மராட்சி விவசாயிகள்

விதை வெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து இம்முறை அதிகளவில் வெங்காய விதைகள் விவசாயிகளால் பயன்படுத்தப்படுகிறது.

விதை வெங்காயம் தற்போது அந்தர் ஒன்றிற்கு 10ஆயிரம் ரூபா வரையில் விற்பனையாகின்றது.

இதற்கு மாற்றீடாக இந்தி யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறிய வெங்காய. விதை களை விவசாயிகள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். பெரிய வெங்காயச் செய்கையைப் போன்று நாற்றுக்களை மீள்நடுகை செய்து சிறியவெங்காயச் செய்கை தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இச் செய்கையின் மூலம் அதிகளவில் இலாபமீட்டப்படலாம் என்று விவசாயிகள் பலரும் கருத்துத் தெரிவித்தனர். (இ)

# முரசின் இன்றைய பலன்

(01.06.2013 - சனிக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 18 ஆம் திகதி.
நட்சத்திரம் சதயம் பிற்பகல் 12.22 வரை. திதி - அட்டமி
மாலை 05.09 வரை. இராகுகாலம் 08.52 - 10.22 வரை.
சுபநேரம் 02.52 - 04.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இனிமையாய் பேசி சமூகத்தில் மதிப்பு பெறுவீர்கள். வாழ்க்கைத் தரம் உயரும். தொழிலில், நண்பர்களின் உதவி கிடைக்கும். வரவுக்கேற்ற செலவும் இருக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வுக்குத் திட்டம். நல்லாரோக்கியம். |
| ரிஷபம் | சாதிக்கும் எண்ணம். ஒரு நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் உருவாகும். வேலையில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். இலாபம் கூடும். பிள்ளைகள் மூலம் மகிழ்வுச் செய்தி. பெரிய கடன் ஒன்று தீரும். |
| மிதுனம் | யாருடனும் தேவையற்ற வாக்குவாதம் வேண்டாம். பொறுமை காத்து ஒதுங்குவது நல்லது. தொழில், குளறுபடி சரிசெய்வீர்கள். பரிசுகள் கிடைக்கும். சேமிப்பு செலவுக்குப் பயன்படும். வாகன பயணத்தில் கவனம். |
| கடகம் | சாதிக்கும் எண்ணம் வளரும். உறவினர், நண்பர்கள் ஆதரவு. வீடு, வாகன திருத்தம். தொழில், தேடிவரும் வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். திறமை வெளிப்பட வாய்ப்பு. எதிர்ப்புகள் அடங்கும். போட்டிகளை சமாளித்து உயர்வு. |
| சிம்மம் | நட்புக்கு முன்னுரிமை தந்து செயற்படுவீர்கள். மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும். தொழில், இடையூறு, சரிசெய்வீர்கள். எதிர்பார்க்காத பணவரவு. தொடங்கும் முயற்சி வெற்றியாகும். பிள்ளைகள் விரும்பியது செய்வீர்கள். |
| கன்னி | உறவினர் பாசம் வியப்பைத் தரும். தொழில், தேங்கியிருந்த வேலைகளை முடிப்பீர்கள். குறைந்த பணவரவு. பகட்டைத் தவிர்த்து சிக்கனம் நல்லது. குடும்பத்தினருடன் அதிக நேரம். மகிழ்விப்பீர்கள். பயணத்தால் பயன் கிடைக்கும். |
| துலாம் | முக்கிய செயல் ஒன்றுக்குத் தடங்கல் வரும். குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதம் கூடாது. தொழிலில், போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு. ஆடம்பரத்திற்காக கடன் வேண்டாம். மருத்துவ சிகிச்சை பெற நேரும். |
| விருச்சிகம் | எண்ணத்தில், செயலில் முரண்பாடு ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை உதவும். தொழில் சரிவை நிமிர்த்த கடும் முயற்சி எடுப்பீர்கள். உறவினர் வகையில் செலவு வரும். போக்குவரத்தில் கவனம் தேவை. மாணவர் தேர்ச்சி. |
| தனுசு | வேண்டிய உதவி செய்து நண்பர், உறவினர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், முன்னேற்றம். உபரி வருமானம். தான, தர்மங்களில் நாட்டம். எதிர்காலத்திற்கான புதிய திட்டமொன்றில் இறங்குவீர்கள். உடல் நலம் சீர்பெறும். |
| மகரம் | திறமையை வளர்ப்பீர்கள். எந்தச் செயலும் இலகுவாக முடியும். பிறரையும் ஊக்கப்படுத்துவீர்கள். தொழிலில் வியத்தகு முன்னேற்றம். உபரி வருமானம். தாயின் தேவை பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தர்க்கு வெகுமதி வரும். |
| கும்பம் | பிறரின் பாராட்டுதல்கள் கிடைக்கும். உழைப்பினால் புதிய சாதனை காட்டுவீர்கள். உபரி பணவரவை சேமிப்பீர்கள். எதிர்பாராமல் வரும் நன்மை வியப்பைத் தரும். உறவினர் இல்ல சுபநிகழ்வு. பிள்ளைகளால் பெருமைப்படுவீர்கள். |
| மீனம் | உங்கள் நற்செயல்களுக்கு சமூக அங்கீகாரம் வரும். சந்தோஷமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். உறவினர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். ஆர்வமுடன் தேடி புதியன கற்பீர்கள். புத்துணர்ச்சியோடு குடும்ப மகிழ்வு. |

## பட்டப் பெயரில் சூதாட்டம்

(மும்பை)

ஆறாவது ஐ.பி.எல். தொடரில், பல் வேறு வீரர்களுக்குப் பட்டப்பெயர்வைத்து சூதாட்ட முகவர்களால் அழைத்து வந்துள்ளது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் முடிந்த ஐ.பி.எல். கிரிக்கெட்தொடரில் வெடித்த சூதாட்டசர்ச்சை, இதுதொடர்பான கைதுகள் இன்னும் முடியவில்லை. மும்பையில் கைது செய்யப்பட்ட பொலிவுட் நடிகர் விண்டுவிடம் இருந்து ஏராளமான தகவல்கள் வெளியாகி வருகின்றன. இவரிடம் தொடர்பு வைத்திருந்த ஜெய்ப்பூர் சூதாட்ட முகவரான சகோதரர்கள் பவான், சஞ்சய் ஆகியோரைத் தேடி வருகின்றனர்.

இதனிடையே, விண்டூ, பவான், சஞ்சய் ஆகியோர் தங்களுக்கிடையே சங்கேத வார்த்தைகளை பரிமாறிக்கொண்டது தெரியவந்துள்ளது. இதன்படி, விண்டு தன்னை ஜாக் என்று அழைத்துக் கொள்வார். ஹவர்லா பணமாற்றத்தின் போது, இந்தப் பெயரைப் பயன்படுத்தினார்.

கிரிக்கெட் வீரர்களில், பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பவர் கிறிஸ் கெய்ல். இதனால், இவரை ராவணன் என்று அழைப்பாராம். கப்டன் டோனிக்கு ஹெலிகொப்டர் என்றும் மலிங்காவுக்கு மக்கி என்றும் பெயர் வைத்துள்ளனர்.

இந்திய அணியின் இளம் வீரர் விராத் ஹோலியை சைனிங், சச்சினை பட்கு எனவும், முகவர்கள் அழைத்துள்ளனர். இதுதவிர, ஹர்பஜன் சிங்கிற்கு டோபி பாக்டி, சேவாக்கிற்கு ஷாஸ்மா, ரெய்னாவுக்கு ஷேர், ஸ்ரீசாந்த்துக்கு ருடு, யுவராஜ் சிங்கிற்கு மொடல் என்றும், அஷ்வினுக்கு பிர்கி எனவும் வைத்துள்ளார்கள். இதுதவிர, மொடல் அழகிகளுக்கும் செல்லப் பெயர் உண்டாம்.

இதுகுறித்து பெயர் வெளியிடவிரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், குருநாத் உள்ளிட்டோர் பயன்படுத்திய பல சங்கேத வார்த்தைகளை கண்டுபிடித்து விட்டோம். இன்னும் சில வற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. விரைவில் இதையும் தெரிந்து கொள்வோம் என்றார்.

## ஆச்சரியமளிக்காத ஐ.பி.எல். சூதாட்டம்

(கொழும்பு)



ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் குறித்த தகவல்கள் எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. இது தொடக்கத்தில் இருந்தே நடந்து வருகிறது. எல்லா சீசனிலும், சூதாட்டம், மது என்று ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டியால் இந்திய கிரிக்கெட்டுக்கு நல்லது கிடைக்கவில்லை. மாறாக அவமானம் மிஞ்சி இருக்கிறது என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உலக கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் இதுபோன்ற மோசமான பெயரை ஒருபோதும் பெற்றது கிடையாது. முன்னாள் தலைசிறந்த வீரர்கள் சிலர் இந்தப் போட்டியின் மூலம் தங்களுக்கு பணம் கிடைக்கிறது என்பதற்காக சூதாட்ட பிரச்சினையை மறைக்க முயல்வது எனக்கு வேதனை அளிக்கிறது. பிரசன்னா போன்ற ஒரு சில முன்னாள் வீரர்கள் தான் இதனை விமர்சித்துள்ளனர்.

இந்த போட்டி கிரிக்கெட் வீரர்களை பேராசை பிடித்தவர்களாக உருவாக்குகிறது. எல்லோரும் ஐ.பி.எல். போட்டியில் விளையாட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனால் வீரர்களின் கவனம் திசைமாறுகிறது. இதுபோன்ற லீக் போட்டி எதற்காகத் தேவை என்பது எனக்குப் புரியவில்லை. இதன் மூலம் இந்திய கிரிக்கெட் என்ன பலனை அடைந்துள்ளது. இது வீரர்களை சீரழிக்கிறது. ஐ.பி.எல். போட்டியால் எந்தவொரு உலகத் தரம் வாய்ந்த வீரரும் உருவாகியிருப்பதாக எனக்கு நினைவில்லை. டெண்டுல்கர், ராவிட், கவாஸ்கர் போன்ற தலைசிறந்த வீரர்களை இந்தியா ஐ.பி.எல். மூலம் பெறவில்லை. இந்திய கிரிக்கெட்டின் உட்கட்டமைப்பு வசதிகள் நல்ல கிரிக்கெட் வீரர்களை உருவாக்க போதுமான வகையில் உள்ளது. அப்படி இருக்கையில் இதுபோன்ற லீக் போட்டிக்கு என்ன தேவை இருக்கிறது எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## மௌனம் கலைத்த சச்சின்

(மும்பை)

கிரிக்கெட்டில் நடைபெறும் தவறான செயல்கள் பற்றிய செய்தி எனக்கு எப்போதுமே காயத்தை ஏற்படுத்தும் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். சூதாட்டம் குறித்து கடந்த இரு வாரங்களாக வெளிவரும் தகவல்கள் எனக்கு அதிர்ச்சியும், ஏமாற்றமும் அளிக்கிறது. கிரிக்கெட்டில் நடைபெறும் தவறான செயல்கள் பற்றிய செய்தி எனக்கு எப்போதுமே காயத்தை ஏற்படுத்தும். கிரிக்கெட் வீரர்கள் என்ற முறையில் நாம் எப்போதுமே கடுமையாக போராடவேண்டும். விளையாட்டில் உண்மை உணர்வை வெளிப்படுத்தும் வகையில் எமது பங்களிப்பு சிறந்ததாக இருக்க வேண்டும்.

கோடிக்கனக்கான இரசிகர்கள் கிரிக்கெட் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்திய கிரிக்கெட்டுக்காக விளையாடுவதை நாம் பெருமையாக கருத வேண்டும்.

கிரிக்கெட் நிர்வாகிகள் இந்த விளையாட்டின் நம்பகத் தன்மையைப் பெற அடிமட்டத்தில் இருந்தே அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

## டெஸ்டில் விளையாட மறுத்தால் அணிகளின் அங்கீகாரம் இரத்து

(டுபாய்)

கணிசமான டெஸ்ட் போட்டிகளில் விளையாட முன்வராத அணிகளின் அங்கீகாரம் இரத்துச் செய்யப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கண்டிப்புடன் தெரிவித்துள்ளது. இது குறித்து டுபாயில் நேற்று முன்தினம் நடந்த ஐ.சி.சி. கிரிக்கெட் குழுக் கூட்டத்தில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. இந்திய அணியின் முன்னாள் சுழல் நட்சத்திரம் அனில் கும்ளே தலைமையில் நடந்த கூட்டத்துக்குப் பின்னர் ஐ.சி.சி. வெளியிட்ட அறிக்கை விபரம் வருமாறு: டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ருவென்ரி –20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்துவதை பல அணிகள் வாடிக்கையாகக் கொண்டுள்ளன. டெஸ்ட் தொடர்களை ஒத்தி வைக்கும் போக்கும் அதிகரித்து வருகிறது. இதைத் தவிர்க்கும் வகையில், நான்கு ஆண்டு காலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத அணிகளின் டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்படும். மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கும் வகையில் போட்டி அட்டவணைகள் தயாரிக்கப்படும். ஒரு நாள் போட்டிகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள விதிமுறைகளால் ஏற்படும் சாதக, பாதக அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு, தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனவாதத்தை ஒழிக்கும் பரிந்துரைக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் ஆதரவு




விளையாட்டுத்துறையில் இனவாதத்தை இல்லாதொழிக்கும் கடுமையான பரிந்துரைகளுக்கு கால்பந்தாட்ட விளையாட்டை நிர்வகிக்கும் உலகளாவிய பிபா அமைப்புக்குள் பலத்த ஆதரவு கிடைத்துள்ளது.

பிபாவின் வருடாந்த காங்கிரஸ் கூட்டத்தில் சுமார் 200இற்கும் மேற்பட்ட உறுப்பு சங்கங்கள் நேற்று கலந்து கொண்டன.

பிபாவின் துணைத் தலைவர் ஜெப்ரி வெப் தலைமையிலான செயலணியினர் தயாரித்திருந்த அறிக்கையே நேற்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இந்த செயலணி முன்வைத்துள்ள பரிந்துரைகள் கால்பந்தாட்ட விளையாட்டுத்துறைக்கு விடுக்கப்படுகின்ற எச்சரிக்கை அழைப்பு என்று ஜெப்ரி வெப் கூறினார்.

கால்பந்தாட்ட அணிகளின் இரசிகர்கள் கால்பந்தாட்ட விளையாட்டு வீரர்களை இனரீதியாக துஷ்பிரயோகப் படுத்தும் செயல்களில் ஈடுபட்டால் குறித்த அணிகளின் தேசிய அங்கீகாரத்துக்கான புள்ளிகளை குறைப்பது, அதிகபட்சமாக எதிர்கால உலக கிண்ணப் போட்டிகளிலிருந்து தடை செய்வது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளைப் பிபா அறிக்கை முன்வைத்தது.

இதேவேளை, இவ்வாறான இனரீதியான துஷ்பிரயோகங்களை முறியடிப்பதற்காக ஐரோப்பிய கால்பந்தாட்ட அதிகாரிகளும் பல்வேறு திட்டங்களை கடந்த வாரம் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக், விளையாட்டு வீரர்களுக்கு 10 போட்டிகளில் விளையாடத் தடைவிதிப்பது, ரசிகர்கள் குழப்பங்களில் ஈடுபட்டால் விளையாட்டரங்குகளை மூடிவிடுவது போன்ற நடவடிக்கைகளை ஐரோப்பிய கால்பந்தாட்ட அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## போதுமான அனுபவம்



(லண்டன்)

சம்பியன்ஸ் கிண்ணத்தை நாங்கள் வென்றால், அது இங்குள்ள சூழலுக்கு ஏற்ப எங்களை மாற்றிக்கொள்வதற்கு போதுமான அனுபவமாக இருக்கும். அத்துடன் ஆஷஸ் தொடருக்கு தயாராவதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்டின் முதல் ஆட்டத்தில் நாங்கள் இங்கிலாந்தை (ஜூன் 8ஆம் திகதி) சந்திக்கிறோம். தொடரின் முதல் ஆட்டம் என்பதால், எங்களுக்கு இது முக்கியமானது. ஆனால் தற்போதைய நிலையில் ஒரு அணியாக நாங்கள் ஆஷஸ் தொடரில் கவனம் செலுத்தவில்லை. ஊடகத்தினரும், எங்கள் நாட்டு மக்களும் ஆஷஸ் தொடர்பான எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளனர்என்பதில் சந்தேக மில்லை. இதே ஆஷஸ் காய்ச்சல் இங்கிலாந்திலும் இருக்கிறது. ஆஷஸ் குறித்து பேசிக் கொண்டிருப்பதால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனெனில் இந்த அருமையான ஆஷஸ் கிரிக்கெட் போட்டியை ஒவ்வொரு அவுஸ்ரேலியர்களும் ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாழ்க்கையின் 2ஆவது இனிங்ஸ்



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் தனது வாழ்க்கையில், 2ஆவது இனிங்ஸை தொடங்கியுள்ளார். மராட்டியத்தைச் சேர்ந்த 25 வயதான அவருக்கும், டில்லியை சேர்ந்த 23 வயதான பேஷன் டிசைனர் தான்யா வாத்வாவுக்கும் இடையே காதல் மலர்ந்தது. இதையடுத்து பெற்றோர் சம்மதத்துடன்கடந்த மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த நிலையில் இவர்களது திருமணம் கடந்த புதன் கிழமை நாக்பூரில் நடந்தது. இல்வாழ்க்கையில் சங்கமித்த கையோடு, உமேஷ் யாதவ் உடனடியாக சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்டில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு பறந்து விட்டார்.

## வில்லியம்ஸ் சகோதரிகள் விலகல்



(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவுப் போட்டியில் இருந்து அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள் ஜோடி விலகியது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக சிறப்பு அனுமதி மூலம் இந்த ஜோடி, விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். அதற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஒற்றையர் போட்டியின்போது முதுகுவலியால் அவதிப்பட்ட வீனஸ், அந்த போட்டியில் மோசமான தோல்வியை தழுவினார். செரீனா இத்தொடரில் 3ஆம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இருவரும் இணைந்து 1999 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகள் பிரெஞ்ச் ஓப்பன் பட்டம் உட்பட 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளனர். இந்த ஆண்டில் ஒரே ஒரு தொடரில் மட்டும், அதாவது அவுஸ்ரேலிய ஓப்பனில் மட்டும் இருவரும் இணைந்து விளையாடினர்.

ஆனால் காலிறுதி வரை முன்னேறிய அவர்கள், சாரா எரானி – ராபர்ட்டா வின்சி ஜோடியிடம் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டையில் சிறப்புற நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான நட்புறவு விளையாட்டு






(வட்டுக்கோட்டை)

வடக்கு மாகாணப் பாடசாலை வீர, வீராங்கனைகள் மற்றும் ஏனைய மாகாண வீர, வீராங்கனைகளுக்கிடையில் நட்புறவை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் மாபெரும் சிநேகபூர்வமான பெருவிளையாட்டுப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் சிறப்புற நடைபெற்றன.

இரு நாட்கள் இடம்பெற்ற இப்பெருவிளையாட்டுப் போட்டிகளில், வலைப்பந்து, கரப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து, ஹொக்கி ஆகிய விளையாட்டுக்கள் நடைபெற்றன.

அநுராதபுரத்தைச் சேர்ந்த 7 பாடசாலை வீர, வீராங்கனைகள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலை வீர,வீராங்கனைகள், மற்றும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் என மொத்தம் 500இற்கும் மேற்பட்டோர் இப்போட்டிகளில் பங்கு கொண்டனர்.

இதில் முதல் நாள் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றது. வடக்கு மாகாணம் சார்பாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், கிழக்கு மாகாணம் சார்பாக மட்டக்களப்பு வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம்செலுத்திய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, அடுத்தடுத்துக்கோல்களைப் போட்டு எதிரணியை அதிர வைத்தது. இறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும், கிண்ணியா மத்திய மகாவித்தியாலய அணிக்கும் இடையில் கால்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில் கிண்ணியா மத்திய மகா வித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணிக்கும், அநுராதபுரம் அசோக்கா மகாவித்தியாலய அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் அனுராதபுரம் அசோக்கா மகாவித்தியாலய அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், அநுராதபுரம் சுவர்ணயாலய மகா வித்தியாலய அணியும் மோதின. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 11-07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் நிறைவுற்றது.

இப்போட்டி நிகழ்வுகள் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலனினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போட்டி நிகழ் வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், வலய, கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரான்லி, ஸ்கந்தா ஸ்ரார் முன்னேற்றம்



ஸ்ரான்லி அணி

(மானிப்பாய்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரில் ஸ்ரான்லி, ஸ்கந்தா ஸ்ரார் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக் கிடையில் 30 ஓவர்களைக் கொண்ட மாபெரும் கிரிக்கெட் தொடரை நடத்தி வரு கின்றது. இப்போட்டிகள் யாழ். இந்துக் கல் லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

மானிப்பாய் இந்து மைதானத்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டி ஒன்றில் ஸ்ரான்லி அணியும், யங்ஸ்ரார்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி, சுதர்சன், கண்ணராஜ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய இந்த ஜோடி 216 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் ஸ்ரான்லி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஓட்ட எண்ணிக்கை யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் வரலாற்றில் ஓர் அணி பெற்றுக் கொண்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்கு முன்னர் யாழ். பல்கலைக்கழகம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. துடுப்பாட்டத்தில் சுதர்சன் 107, கண்ணராஜ் 97 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரஜீவ் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 312 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங் ஸ்ரார்ஸ் அணி, 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. சுயன் 49, கமல் 56 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் துஷானந்தன் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, யாழ்.இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யூனியன் அணியும், ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற யூனியன் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.இதற்கமைய் முதலில் ஆடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 29.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிசாகரன் 39, ஸ்ரீகஜன் 38, நிரோஜன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுஜந்தன் ஐந்து, சதீஸ்கண்ணா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன் அணி 21.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.இதில் சதீஸ்கண்ணா 40, தயாளன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்சயன் நான்கு, நிரோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாலர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளதுடன் சிறார்களின் விளையாட்டு, பழைய மாணவர் ஓட்டம், வினோத உடை, மத்தியஸ்தர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விளையாட்டு என்பன இடம்பெறவுள்ளன.

கணபதி படிப்பகத் தலைவர் ச. ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் செல்வி. இராட்சியலட்சுமி சுப்பிரமணியக்குருக்கள், சிறப்பு விருந்தினராக பொலிகண்டி மேற்கு கிராம உத்தியோகஸ்தர் சி. தவனேஸ்வரன், வலி.கிழக்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செல்வி அமிர்தராணி இரத்தினவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்களைக் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டுமாறு அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.



கரவெட்டி புதுவசந்தன் மற்றும் லெவிங் ஸ்ரார் அணிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் லெவிங் ஸ்ரார் அணி 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. லெவிங் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி. யின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிக்கு கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார்.

ஆங்கில நாவலாசிரியை அகதா கிறிஸ்டி எழுதிய the pale horse (வெளிறிய குதிரை) என்ற நாவல், நடந்து முடிந்த இரு சம்பவங்களின் மர்மத்தை அறிய உதவியது என்றால் ஆச்சரியமாக உள்ளது அல்லவா?

ஆம்! ஆபிரிக்காவில் இருந்து லண்டனுக்கு ஒரு பெண்ணை சிகிச்சைக்காக அழைத்து வந்தனர். எவ்வளவு சிறந்த சிகிச்சை அளித்தும் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லை. ஆறாவது நாள் அப்பெண்ணின் தலைமுடி கொத்து கொத்தாகக் கொட்டத் தொடங்கி, மாலையில் முழு வழுக்கையானாள் அவள். மருத்துவர்களுக்கே ஒன்றும் புரியவில்லை.

அவருக்குத் துணையாய் இருந்த செவிலிப் பெண்மணி தனது சந்தேகத்தை மருத்துவர்களிடம் தெரிவித்தாள். அவர்கள் சோதித்த போது எல்லாப் பிரச்சினைகளுக்கும் "தோலியம்" என்ற இரசாயனப்பொருள் தான் காரணம் என்பதை உறுதி செய்தனர்.

மருத்துவர்கள் அந்த செவிலிப் பெண்மணியை விசாரித்தபொழுது, தான் சில நாட்களுக்கு முன் படித்த அகதா கிறிஸ்டியின் the pale horse நாவலில் இப்படி ஒரு கதாபாத்திரம் "தோலியம்" என்ற இரசாயனப்பொருளால் பாதிக்கப்பட்டது நினைவிற்கு வந்தது என்றாள்.

ஒரு நாவல் ஒரு நோயாளியின் உயிரை சரியான சமயத்தில் காப்பாற்றியதை எண்ணி அனைவரும் மகிழ்ந்தனர்.

ஆனால் அதே நாவல் சில வருடங்களுக்குப் பிறகு சிலர் உயிரையும் பறித்ததுதான் வேதனையான செய்தி.

லண்டன் நகரின் எல்லையில் இருந்த தொழிற்சாலையில் வேலை செய்த சிலர் மர்மமான முறையில் தொடர்ந்து இறந்தனர். என்ன செய்தும் காரணம் கண்டறிய முடியவில்லை.

துப்பறியும் நிபுணர் ஒருவர் இரகசியமாக அத்தொழிற்சாலையில் பணியில் சேர்ந்தார். ஒருநாள் ஓய்வு நேரத்தில் தொழிலாளர்கள் ஒன்று கூடிப் பேசியதை கவனித்துக் கொண்டிருந்தார்.

பேச்சு, எங்கெங்கோ சென்று இறுதியாகத் தொழிலாளர்களின் மர்மச் சாவில் வந்து முடிந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக யூகம் செய்தார்கள். இறுதியாக ஒருவன் "தோலியம்" பற்றி வாய் திறந்தான். மாட்டிக் கொண்டான்!

பொலிஸார் அவனை "நன்கு கவனித்த" பிறகு கடைசியில் உண்மையைச் சொன்னான். அகதா கிறிஸ்டியின் the pale horse நாவலில் படித்த "தோலியம்" என்ற இரசாயனப் பொருளை சோதிக்க விரும்பி வாரம் ஒருவருக்கு அதைத் தேநீரில் கலந்து கொடுத்ததாகக் கூறினான். உலகமே அதிர்ந்தது.

# ஒரு நாவல்... இரண்டு சம்பவம்...






The pursuit of happyness படத்திற்குப் பிறகு வில் ஸ்மித்தும், அவரது மகன் ஜேடன் ஸ்மித்தும் மீண்டும் இணைந்து நடிக்கும் படம் after earth. இப்படத்தினை கொலம்பியா பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது. இப்படத்தினை பிரபல ஹொலிவுட் இயக்குனரும் அமெரிக்க இந்தியருமான மனோஜ் நைட் ஷியாமளன் இயக்கியிருக்கிறார். ஒரு பயணத்தின் போது ஏற்படும் ஒரு விண்வெளி விபத்தில் தந்தையும் மகனும் ஒரு பயங்கர கிரகத்திற்குள் சென்று விழுந்துவிடுகிறார்கள். மனிதர்களுக்கு எதிரான பல சக்திகள் உள்ள அந்த கிரகம், வேறு எதுவும் அல்ல... நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பூமியே இன்னும் 1000 வருடங்களில் அப்படி மாறிப் போயிருப்பதாகக் காட்டியிருக்கிறார்களாம். "ஆஃப்டர் ஏர்த்" அமெரிக்காவில் மே 31ஆம் திகதி வெளியாகிறது. தமிழிலும் ஜூன் 7ஆம் திகதி வெளிவரும் இப்படத்திற்கு "அபாய கிரகம்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

## வீட்டுக்குள்ளும் மாசு!

மாசடைந்த காற்றைச் சுவாசிப்பதால் ஆண்டுக்கு 73 இலட்சம் பேர் இறந்து போகிறார்களாம்! ஒவ்வோராண்டும் எய்ட்ஸ், மலேரியா போன்றவற்றால் இறந்து போகிறவர்களின் எண்ணிக்கையை விட இது 50 இலட்சம் அதிகம்.

தொழிற்சாலைகளில் இருந்து வரும் இரசாயனப் புகை, தூசி, வாகனங்களிலிருந்து வரும் புகை போன்றவற்றால் தான் காற்று மாசடைகிறது என்று நினைக்காதீர்கள். வீட்டுக்குள்ளும் காற்று மாசடைகிறது. இதனால் உலகம் முழுவதும் ஆண்டுக்கு 35 இலட்சம் பேர் இறந்து போகிறார்கள்.

இந்த தகவல்களை உலக சுகாதார நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

# பிழையின்றித் தமிழ் 22

- ஞானச்செல்வன் -

**கருத்துச் சிதைவுகள்:**

கண்ணகி கோவலனோடு சில மாதங்களே குடும்பம் நடத்தினாள் என்று ஒருவர் பேசக் கேட்டேன். சில மாதங்கள் அன்று; சில ஆண்டுகள் கண்ணகி கோவலனோடு அன்புற்று இன்புற்று வாழ்ந்தாள் என்று சிலப்பதிகாரம் சொல்கிறது. தனிமனை வாழ்க்கையில் யாண்டு சில கழிந்தன கண்ணகி தனக்கு என்பார் இளங்கோவடிகள். உலகின் நிலையாமையை உணர்ந்து எல்லா இன்பமும் இப்போது துய்த்திட வேண்டும் என்பது போல் இன்பம் துய்த்தார்களாம்.

"கருத்து யுத்த"மாம் இப்படி ஒரு பேச்சு நிகழ்ச்சி. ஏன்? கருத்துப் போர் எனில் யாருக்கும் புரியாதோ? போரைவிட யுத்தம் பெரிது என்று கருதினார்களோ? நல்ல தமிழிருக்க யுத்தத்தில் நாட்டம் ஏனோ? இது போகட்டும். நாம் எழுத நினைத்தது வேறு ஒன்று. அது நிகழ்வில் பேசிய ஒருவர் சொல்லிய கருத்து. அவர் சொன்னார்: "அரண்மனைக்கு வந்த சோதிடன் ஒருவன் இளங்கோ அரசனாவார், அவர் தம்பிக்கு அரசாட்சி இல்லை என்றபோது, இளங்கோ தம்பி அரசாளட்டும் என்று சொல்லித் துறவியானார்".

**கதையையே மாற்றிவிட்டார்.**

மூத்தவன் இருக்க இளையவன் அரசனாவான் என்றான் சோதிடன். இளங்கோவுக்கே அரசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்றான். அண்ணன் செங்குட்டுவன் மனம் நோகும் என்பதால், அப்போதே அரண்மனை விட்டகன்று துறவு மேற்கொண்டார் என்பது வரலாறு.



இரவு மணி எட்டு: தன் பேச்சைத் தொடங்கிய பேச்சாளர் "இந்த இனிய மாலை நேரத்தில்" என்று தொடங்கினார். உடனே, இல்லை மாலை நேரம் போய்விட்டது. இப்போது இரவாயிற்று என மாற்றினார். உண்மையில் பத்துமணி வரை மாலை என்பதுதான் தமிழர் வகுத்துள்ள கணக்கு.

காலை (மணி 6 - 10) நண்பகல் (10-2), எற்பாடு (2-6), மாலை (6-10) யாமம் (10-2) வைகறை (2-6), என்பவை ஒரு நாளின் ஆறு சிறு பொழுதுகள். (எல் - கதிரவன், படுதல்-சாயுதல்), இளவேனில் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி) முன்பனி (மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி) என்பவை ஓராண்டின் ஆறு பருவங்கள். (கார் - மழை, கூதிர் - குளிர்)

"சமுதாயச் சிக்கல்களும் சித்தர் ஆய்வுத் தீர்வைகளும்" எனும் தலைப்பில் ஒரு நூல் நமது மதிப்புரைக்கா அனுப்பப்பட்டு வந்திருந்தது. இந்தப் புத்தகத்தின் தலைப்பு நம்மைத் திகைக்க வைத்தது. நீளமாக இருப்பதால் அன்று. ஆய்வு தீர்வை எனும் சொல் கண்டு மலைத்தோம். ஆயத் தீர்வை நாம் அறிந்ததுண்டு. இஃது என்ன ஆய்வுத் தீர்வை? ஆய்வுத் தீர்வுகள் எனும் சொல்லைத் தீர்வைகள் (நிலவரி) ஆக்கியமை எத்துணை பெரிய தவறு!

பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு வார ஏட்டில், ஒரு கவிதை படித்தேன். அதில் "அக்கினிப் பிரவேசம் அயோத்தியில் நடந்தது" என்று ஒரு வரி. இராமன் இராவணனைக் கொன்ற பின், சீதையை அழைத்துக் கொண்டு ஊர் திரும்பும் முன்பு, சீதை அப்பழுக்கற்றவள் எனக் காட்டத் தீக்குளிக்கச் சொன்னான். அந்த அக்கினிப் பிரவேசம் இலங்கையில் நடைபெற்றது. இவரோ அயோத்தியில் என்று எழுதியுள்ளார். அரைகுறையாய் அறிந்த செய்தி கொண்டு மோனை அழகுக்காக இப்படி எழுதினாரோ!

பேருந்து ஒன்றில், "பஸ் நின்ற பின் இரங்கவும்" என்று எழுதியிருந்தார்கள். "ஐயோ இந்த ஓட்டைப் பேருந்தில் பயணம் செய்தோமே" என்று தன்னிரக்கம் கொள்ள வேண்டியதுதான்.

# காலத்தால் மறையாத கோகிலாம்பாள்

- முருகபூபதி -

உருத்திரபுரம் என்றவுடன் எங்கள் ஈழத்து தமிழ்சமூகத்தின் மூத்த தலைமுறையினருக்கு உடனடியாக ஞாபகத்திற்கு வருவது உருத்திரபுரம் கோகிலாம்பாள்தான்.

அந்தக் கொலைச்சம்பவம் நடந்து அரைநூற்றாண்டு காலமாகிவிட்டது. ஆனாலும் கோகிலாம்பாள் இன்றும் பேசப்படுகிறாள். எழுதப்படுகிறாள்.

அவுஸ்ரேலியாவில் மேடையேறிய நண்பர் மாவை நித்தியானந்தனின் கொழும்பு மெயில் இசை நிகழ்ச்சியிலும் கோகிலாம்பாள் ஒரு பேசுபொருள்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் இரவுநேர தபால் ரயில் பயணம் சுவாரஸ்யமானது. அனுபவித்தவர்களுக்குப் புரியும். பயணிகள் பலதும் பத்தும் பேசி சிரித்து கும்மாளமிட்டுவருவார்கள். ஊர்வம்பு பேசுவார்கள். முதியவர்கள் கோகிலாம்பாள் சம்பந்தப்பட்ட அந்தக் கொலைச்சம்பவம் பற்றி விஸ்தாரமாக கலந்துரையாடுவார்கள். அந்தக் காட்சியும் குறிப்பிட்ட கொழும்பு மெயில் இசைநிகழ்ச்சியில் சொல்லப்படும். எல்லாம் அநுராதபுரம் வரையில்தான். உரையாடி முடிக்கும்போது கொட்டாவிவரும். ஆசனங்களில் காலை நீட்டி நிமிர்த்தி உறங்கி வருவார்கள்.

அநுராதபுரத்தில் ஏறும் சிங்களப்பயணிகள் "நெகிட்டனவா.. நெகிட்டனவா" என்று தட்டி எழுப்பி அமருவார்கள். தங்கள் ஆழ்ந்த உறக்கத்தை கலைத்துவிட்டார்களே இந்த பெரும்பான்மை இனத்தவர் என்று தமிழர்கள் மனதுக்குள் கறுவிக்கொள்வார்கள்.

இந்தப் பயண அனுபவம் பெற்றிருந்த "சிரித்திரன்" ஆசிரியர் சிவஞானசுந்தரம் ஒரு சமயம் மகுடி கேள்வி பதிலில் இவ்வாறு எழுதியிருந்தார்.

கேள்வி: தமிழர்களை தட்டி எழுப்பிய பெரியோர் யார்?

பதில்: அநுராதபுரத்தில் ரயிலேறும் சிங்களச் சகோதரர்கள்.

அன்னலட்சுமி இராஜதுரை எழுதியுள்ள நினைவுப்பெருவெளி என்ற நூலிலும் பிரான்ஸில் வதியும் புஷ்பராணி எழுதியுள்ள அகாலம் நூலிலும் அந்தக் கோகிலாம்பாள் இடம்பெறுகிறாள்.

ஏன்...? அவள் ஒரு பெண் என்பதனாலா? அல்லது அவள் சம்பந்தப்பட்ட கொலைச்சம்பவம் பாலியல் தொடர்புடையது என்பதனாலா? இல்லை... ஒரு மர்மநாவலுக்குரிய சூட்சுமங்கள் அதில் விரவிக் கிடப்பதனாலா? அவள் ஒரு பிராமண ஆஸ்திக சமூகத்திலிருந்து வந்த பெண் என்பதனாலா? பதிலை எப்படியும் தேடிக்கொள்ள முடியும்.

கோகிலாம்பாள் ஆயுள்தண்டனை பெற்று நன்னடத்தையினால் விடுதலையாகி நெடுந்தீவு திரும்பி சில வருடங்களுக்கு முன்னர் காலமாகிவிட்டாள். அவளது கதையை திரைப்படமாக்குவதற்காகவும் சிலர் அவளைத் தொடர்புகொண்டதாக அறியக்கிடைத்தது.

மின்சார வசதி இல்லாத ஒரு காலத்தில் அந்த உருத்திரபுரம் கிராமத்தில் ஆலய வளவில் நடந்த அந்தச்சம்பவம் உலகத்திற்கு தெரியவந்தபோது பத்திரிகைகள் போட்டிபோட்டுக்கொண்டு சுடச்சுட வழக்கு சம்பந்தப்பட்ட செய்திகளை வெளியிட்டன. யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையின் விற்பனை பெருகியது. கொழும்பில் வீரகேசரி அலுவலகம் அந்தச் செய்திகளுக்காக நேரத்தையும் பக்கத்தையும் ஒதுக்கியது.

என்னதான் நடந்தது?

உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயரின் போக்குவரத்து தேவைகளுக்காக வந்துபோன ஒரு கார்ச்சாரதி வேலுப்பிள்ளை. எப்படியோ ஐயரின் மனைவி கோகிலாம்பாளின் அழகில் மயங்கிவிட்டான். காதல்வசப்பட்டான்.

காமம் கண்களை மறைத்துவிட்டிருக்கவேண்டும்.

கொல்லப்பட்ட ஐயர், எருக்கும்பத்துக்குள் புதையுண்டார். தீவுப்பகுதியிலிருந்து மகனைப்பார்க்க வந்த தந்தையாரிடம் அதாவது மாமனாரிடம் கோகிலாம்பாள் "அவர் வெளியூர் போயிருப்பதாக" பொய்சொல்கிறாள்.

அவரும் மகனைக்காணாது தவிக்கிறார்.

இந்நிலையில் ஒருநாள் கோகிலாம்பாளின் பெண் குழந்தை குழப்படி செய்ய தாய் அடித்துவிடுகிறாள். குழந்தை "அப்பா..அப்பா.." என்று அழுகிறது.

"ஓமோம்" அப்பா எருக்கும் பத்துக்கை இருந்துதான் வரப்போகிறார்... என்று வாய்தடுமாறி சொல்கிறாள் கோகிலாம்பாள்.

சொற்கள் கொல்லும்... வெல்லும் என்பார்கள். அன்று அவள் சொன்ன சொற்களே அவளை குற்றவாளிக்கூண்டில் ஏற்றவைத்துவிட்டன. கொல்லப்பட்ட ஐயரின் தந்தையிடம் பேத்தி, அம்மா சொன்னதை சொல்லிவிட்டாள். அவர் உஷாரடைந்தார். கோகிலாம்பாளின் கெட்டகாலம் மழை வந்து அந்த எருக்கும்பத்தை கரைத்துவிட உடல் வெளியே வந்துவிட்டது.

கோகிலாம்பாளும் அவளது காதலன் வேலுப்பிள்ளையும் சம்பவத்தை தெரிந்திருந்து மறைத்த பசுபதியும் கைதானார்கள். பசுபதி அப்ரூவர் ஆனான். வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு வந்தது.



நீதியரசர் எச்.டபிள்யூ. தம்பையா. குற்றவாளிகளின் சார்பில் முதலில் ஆஜராகவிருந்தவர் ஊர்காவற்றுறை எம்.பி. சட்டத்தரணி நவரத்தினம். அப்பொழுது அவர் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி. ஆனால் பொம்பிளை ஒருத்தி சம்பந்தப்பட்ட அந்த வழக்கில் அவர் ஆஜராவதை தந்தை செல்வநாயகம் விரும்பவில்லை. அச்சமயம் ஜூனியராக இருந்த அமிர்தலிங்கத்தையே குற்றவாளிகளுக்காக வாதிடுமாறு கேட்டுக்கொண்டார்.

அவரும் தந்தை சொல் மீறாத தனயன்.

ஐயர் வெட்டிக்கொல்லப்பட்டது சாணம்பூசிய வீட்டுத்தரையில். ஆனால் இரத்தம் தரையில் மாத்திரம்தான் என்று நம்பியது குற்றவாளிகளின் விதி. இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் கொழும்பிலிருந்து வந்து பார்த்தபோது தரையில் இரத்தக்கறை இல்லை. சாணம் மறைத்துவிட்டது. ஆனால் கதவு நிலையில் கீழ்ப்புறத்தில் பதிந்து காய்ந்திருந்த இரத்தத்துளிகள் அனைத்தையும் காட்டிக்கொடுத்துவிட்டன.

வேலுப்பிள்ளைக்கு மரணதண்டனை. கோகிலாம்பாளுக்கு ஆயுள் தண்டனை. பசுபதிக்கு விடுதலை.

அந்தத் தண்டனைகளின் தீர்ப்புச்செய்தியை எழுதி அச்சுக்கு கொடுக்கும்பொழுது இரவு எட்டுமணிக்கும் மேலாகிவிட்டது என்று தமது நூலில் குறிப்பிடுகிறார் அன்னலட்சுமி இராஜதுரை. பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆயுள்கைதியாக கோகிலாம்பாளை வெலிக்கடை சிறையில் சந்திக்கின்றார். அங்கு மேலதிகாரிகளினதும் சிறைக்கைதிகளினதும் நன்மதிப்பைப் பெற்றவளாகவும் அவள் திகழ்ந்திருக்கிறாள். சிங்களமும் பேசுவதற்கு பழகினாள்.

அந்த வழக்கில் அமிர்தலிங்கம் தோற்றுப்போனதால் எதிர்க்கட்சியான தமிழ்க்காங்கிரஸாரால் மேடைகளில் அவர், கோகிலாம்பாள் அமிர்தலிங்கம் என்று வர்ணிக்கப்பட்டார்.

மின்சார வசதி இல்லாதிருந்த அந்தக் கிராமத்துக் கொலைச்சம்பவம் அந்நாளில் பெரிதும் பேசப்பட்டது.

ஆனால் காலப்போக்கில் ஈழமண்ணில் எத்தனை எத்தனை கொலைகள். எத்தனை எத்தனை புதைகுழிகள். அவையெல்லாம் நூறோடு நூறாக ஆயிரத்தோடு ஆயிரமாக மறக்கப்பட்டுவிட்டன.

ஆனால் கோகிலாம்பாள் இன்றும் ஏடுகளில் நினைவுகளில் வாழ்கிறாள்.

கோகிலாம்பாளை துரோகத்தின் சின்னம் என்பதா...? அல்லது காதலின் பரிதாபத்துக்குரிய அடையாளம் எனச்சொல்லவா? எனக்கேட்கிறார் "அகாலம்" நூலில் புஷ்பராணி.

இந்தக் கேள்வி அவள் பற்றிய செய்தி அறிந்த எம்மையும் தொடருகிறது.

---

ஓட்டோமொபைல் எனப்படும் மோட்டார் வாகன தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நாடு ஜெர்மனி. பி.எம்.டபிள்யூ, மெர்சிடஸ் பென்ஸ், ஒடி, ஒபெல், வொக்ஸ்வேகன் என அனைத்து நாடுகளின் சாலைகளிலும் தடம்பதித்துள்ள சொகுசுக் கார்கள் அனைத்தும் ஜெர்மானியத் தயாரிப்புகள்தான்.

அதே நேரத்தில் ஜெர்மனியின் மோட்டார் வாகனத் துறைக்கு சவால் விடும் வகையில் ஒரு பஸ்ஸைத் தயாரித்தது சீனா. சூப்பர் லைனர் என்று பெயரிடப்பட்ட இந்த பஸ்ஸின் நீளம் 82 அடி. இதில் 300 பேர் வரை அமர்ந்து பயணம் செய்ய முடியும். அதிகபட்சமாக மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் செல்லும். 5 கதவுகளுடன், உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வசதிகளுடன் இந்த பஸ் சீனாவின் முக்கிய நகரங்களில் இப்போது இயங்கி வருகிறது.

அதிக மக்கள்தொகை கொண்ட சீனாவில் பஸ்களில் கூட்ட நெரிசலைத் தடுக்கவும், பொதுப் போக்குவரத்துக்கு மக்களை ஈர்க்கும் வகையில் இந்த பிரமாண்டமான பஸ்ஸை சீனா உருவாக்கியிருக்கிறது.

எனினும் இதனை தங்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாக எடுத்துக் கொண்ட ஜெர்மனி, இதைவிட பிரமாண்டமான பஸ்ஸைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றுவிட்டது.

ஜெர்மனியின் மெகா பஸ் 101 அடி நீளம் உடையது. ஆனால் 256 பயணிகள் மட்டுமே அமர்ந்து பயணிக்க முடியும். பெரும்பாலும் மின்சாரத்திலும், தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் டீசலிலும் இயங்கும் வகையில் இந்த பஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த பஸ்ஸால் சுற்றுச்சூழல் மாசுபடாது என்பது சிறப்பம்சம். போக்குவரத்து நெருக்கடி அதிகமுள்ள, குறுகிய சாலைகளில் இந்த பஸ்களை இயக்குவது கடினம் என்றாலும், நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு இந்த பஸ் சிறப்பானதாகவே உள்ளது.

தங்கள் நாட்டில் இதேபோன்ற பஸ்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு, பராமரிப்பு ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்த சீனா, ஜெர்மனியில் இருந்து பஸ்களை வாங்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது. ஒரு பஸ்ஸின் விலை சுமார் ரூபா 17 கோடி.

இதற்கு முன்பு மெர்சிடஸ் பென்ஸ் நிறுவனம் தயாரித்து அளித்த பிரமாண்ட பஸ்கள் 2002 முதல் 2007ஆம் ஆண்டு வரை லண்டன் நகரில் இயங்கி வந்தன. இந்த பஸ்களால் ஏற்பட்ட விபத்துகள், போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றால் லண்டனுக்கு இந்த வகை பஸ் தேவையில்லை என கைவிடப்பட்டது.

நம் நாட்டு வீதிகளில் பஸ்களை இயக்குவது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. எனவே இத்தகைய நீள...............மான பஸ்ஸை படத்தில் மட்டுமே பார்த்து நாம் ஆறுதல் அடையலாம்.



## நீளமான பஸ்

# மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

## கல்விப் பணிப்பாளரின் கருத்தில் அர்த்தமுள்ளதா?

2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் பெறுபேற்று வீதங்களின் அடிப்படையில் ஆசிரியர்களின் செயற்பாட்டை முன்வைத்து ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றும்போது "மாணவர்களின் சித்தி வீதத்திற்கான முழுப் பொறுப்பினையும் ஆசிரியர்களே எடுக்க வேண்டும். இதற்கு ஆசிரியரே வகை கூற வேண்டும் எனக் குறித்த கல்வி வலயமொன்றின் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது குறித்து ஆசிரியர்கள் மத்தியில் பாரிய சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. இவரது கருத்து நியாயபூர்வமானதல்ல, நடைமுறை யதார்த்தத்திற்கு உட்பட்டதல்ல என்பதே இச்சர்ச்சைக்கு அடிப்படையாகும். இது தொடர்பாக இவர் மேலும் உரையாற்றும் போது தரம் 11 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலை முடிவடைந்த பின் மாலை 2 மணி முதல் 5 மணிவரை மேலதிக வகுப்புக்கள் எடுக்க வேண்டும். இது கோட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்டு நடைமுறைக்கு வரவேண்டும் எனக் கோரியுள்ளார்.

தற்போதுள்ள மாணவர்களின் வாழ்வியல் விரிவாக்கத்தில் சித்தி வீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் பல உருப்பெறுகின்றன. உளவியல் ரீதியான காரணிகள், சமூக ரீதியான காரணிகள், பொருளாதார ரீதியான காரணிகள் எனப் பல காரணிகள் பங்கெடுக்கின்றன.

இதில் ஆசிரியர்களை மட்டும் குற்றம் சாட்டுவது எந்தவகையில் ஏற்புடையது என்பதே ஆசிரியர்களின் முன்வைப்பாகும். களத்தில் நின்று கடமையாற்றும்போது மாத்திரமே சிலரிற்கு சில விடயங்கள் புரியும்.

> “ மாணவர்கள் சித்தி விகிதம் தொடர்பாக உளவியல் ரீதியான காரணிகள். சமூக ரீதியான காரணிகள். பொருளாதார ரீதியான காரணிகள் எனப் பல்வகை காரணிகள் காணப்படுகின்றன. பணிப்பாளரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் இடத்து ஆசிரியர்கள் இத்தகைய காரணிகளுக்கு தீர்வு காண்பதற்குரிய பொறுப்பாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். இத்தகைய தன்மை ஆசிரியர்களது பணியில் மேலும் பணிச்சுமையை அதிகரிப்பதாகவே அமைகின்றது ”

முன்னொரு காலத்தில் இருந்த மாணவ சமூகமென்பது வேறு, தற்போதுள்ள மாணவ சமூகமென்பது வேறு, ஆசிரியர்கள் மாத்திரம் மனம் வைத்தால் எதையும் சாதிக்க தற்போது முடியாது. பெற்றோர்களின் ஒத்துழைப்பு, மாணவர்களின் ஈடுபாடு, ஆசிரிய மாணவ உறவுநிலை விரிசல், சட்ட அமுலாக்கங்கள், நாகரிக வாழ்வியல் ஈடுபாடு, அர்பணிப்புகள், கடின உழைப்பிற்கு இடமற்ற தன்மை எனப் பல உள்ளபோது எவ்வாறு, யாரோ விடுகின்ற தவறுகளை ஆசிரியர்கள் சுமக்க முடியும்.

தலையடி போடும் பட்சத்தில் வெளியீடுகளை வெருட்டிப் பெறலாம் என எண்ணும் அதிகாரிகள் அதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை ஏன் சிந்திக்க மறந்து விடுகின்றனர். கடமையை நிறைவேற்றத்தவறும் ஆசிரியர்களை கண்டிப்பது கட்டாய தேவையாகும். ஆனால் பொதுமைப்பட்ட கருத்துக்களை வெளியிடும் போது சிந்தித்து வெளியிட வேண்டும் என்பதே ஆசிரியர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும்.

நடைமுறையில் பல சிக்கல்கள் இருப்பதை உணர்ந்த ஆசிரியர்கள் கல்வி வலயங்கள் விடும் தவறுகளையும் சகித்துத்தான் இதுவரை நடந்தார்கள். வளப் பகிர்வுகள் உட்பட பல தவறுகளை கல்வி வலயங்கள் இழைத்துக் கொண்டு, ஆசிரியர்கள் மீது முழுப்பழியையும் போடுவது எந்த வகையில் ஏற்புடையது.

ஆசிரியர்கள் தற்கால மாணவ சமூகத்துடன பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தே கற்றல், கற்பித்தல் செயலொழுங்கை முன்னெடுத்து வருகின்றனர்.

வன்முறை வார்த்தைகள் பலவடிவங்களில் வரும் உயர்தர வகுப்புக்களில் பெண் ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டுதான் கற்பிக்கின்றார்கள். இதற்கு அப்பால் அதிகாரிகளின் மிரட்டல்களுக்கும் ஆசிரியர்கள் முகம் கொடுக்க முடியாது என்பதே இவர்களின் முன்வைப்பாகும்.

ஆசிரியர்கள் சமுகத்தில் ஒரு நற்பிரஜைகளை உருவாக்குவதில் அதீத பங்காற்றுகிறார்கள். நூறு வீத சித்தியை நோக்கிச் செயற்படும்போது மாணவர்களை நற்பிரஜையாக்கும் முயற்சிகள் தோல்வியில் கொண்டுபோய் விடுவதாகவும் இவ் ஆசிரியர்கள் கவலைப்படுகின்றார்கள். இங்கு சித்தி வீதத்தை நோக்கிய செயற்பாடே முதன்மை பெறுவதனாலும் மாணவர்களின் ஒழுக்கம் போற்றப்படடாது போய்விடுவதும் காரணமாகின்றது.

- பூஞ்சிட்டு



# புதிர்ப்போட்டி 46

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**புதிர்ப்போட்டி 46 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 22.06.2013**

**1**

**சொற்களும் அவற்றிற்கான இரகசியக் குறியீட்டு எண்களும் கீழே தரப்பட்டுள்ளன. ஆனால் அவை சரியானவை அல்ல. சரியான சொற்களுக்குரிய இரகசியக் குறியீட்டு எண்களை வகைப்படுத்தி விடை தருக.**

| INSTALL | NATIONS | STINGS | INSTILL | STATIONS |
|---|---|---|---|---|
| 324503 | 4532177 | 5124953 | 9624953 | 453247 |

OPTIONS
32124953

**பின்வரும் சொற்களுக்குரிய இரகசியக் குறியீட்டு எண்களைக் கண்டு அதற்குக் கீழ் கீறிடுக.**

LOTIONS
1) 4532177 2) 4532477 3) 7924953 4) 7532173

2) POSTAL
1) 693417 2) 694217 3) 693517 4) 693217

3) STILL
1) 32577 2) 32477 3) 54277 4) 32677

4) SANITATIONS
1) 31642124 2) 31562124953
3) 31542124953 4) 31552124953

**தானங்களுக்கான இரகசியச் சொற்களை இனங்காண்க**

5) 2933
1) STOP 2) TELL 3) TILL 4) TOSS

6) 2477
1) TELL 2) TOLL 3) TILL 4) POST

7) 32477
1) STOPS 2) STILL 3) POSTAL 4) PISTON

8) 643295
1) POSTAL 2) STOPS 3) STILLS 4) PISTON

**2**

**9) இலங்கையில் மிக நீளமான பாலம் எது?**

**10) பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிடம் எது?**

**11) ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடம் எது?**

**12) சபாநாயகரின் உத்தியோகபூர்வ வதிவிடம் எது?**

**13) நாட்டின் வரலாற்றில் (இலங்கை) மிகக் குறைந்த காலம் பிரதமர் பதவி வகித்தவர் யார்?**

சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது.

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

### அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### புதிர்ப்போட்டி 44 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- அ.நியூட்டன்
தரம் :- 06 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- தோ.உதயகுமார்
தரம் :- 10 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- யோ.தனுசன்
தரம் :- 12 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலம்.

பெயர் :- ம.யோதீஸ்வரன்
தரம் :- 12 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலம்.

### புதிர்ப்போட்டி 45 இற்கான சரியான விடைகள்

**1**
1) 7 km
2) இல்லை
3) சரத்
4) 40 km

**2**
1) 74
2) 82
3) லொறி
4) துவிச்சக்கரவண்டி
5) பஸ்
6) 7

### விணணபபதாரரின விபரம

மாணவர் முழுப்பெயர் :- ..........................
பாடசாலையின் பெயர் ..........................
தரம் :- :- ..........................
தொலைபேசி இல.:- ..........................
முகவரி :- ..........................
..........................






## மேஷம்:

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம்

சொல்வன்மை மிகுந்தவர் நீங்கள். குரு பகவான் இப்போது 3-ஆம் வீட்டுக்கு அடியெடுத்து வைக்கிறார். 28.5.13 முதல் 12.6.14 வரை, உங்களின் விரய-பாக்கிய ஸ்தானாதிபதியான குரு, 3-இல் மறைவதால், எதையும் அறிவுபூர்வமாக அணுகுவது நல்லது. எடுத்த காரியங்களை முடிக்க, அதிக முயற்சி தேவை. முக்கிய அலுவல்களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். குடும்பத்தினர் கருத்துக்களை அமைதியாக ஏற்றுக்கொள்ளுங்கள். பணம் வந்தாலும் சேமிக்க இயலாமல் செலவுகள் துரத்தும். வசதி-வாய்ப்புகளைக் கண்டு தவறானவர்களுடன் நட்பு கொள்ளவேண்டாம். உணவுக் கட்டுப்பாடு, மருந்து உட்கொள்ளும்போது மருத்துவ ஆலோசனை அவசியம்.

உங்களின் 7-ஆம் வீட்டை குரு பார்ப்பதால், திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிட்டும். வி.ஐ.பி-கள் நட்பாவர். தம்பதிக்குள் சரவுகள் எழுந்தாலும் அந்நியோன்யம் குறையாது. குரு உங்களின் 9-ஆம் வீட்டைப் பார்ப்பதால் பணவரவு உண்டு. கடன் கட்டுக்குள் வரும். தந்தையின் உடல் நலன் சீராகும். அவருடனான கருத்துமோதல் விலகும். வழக்கு நெருக்கடிகள் நீங்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குரு 11-ஆம் வீட்டைப் பார்ப்பதால், கல்வியாளர்கள் நட்பால் தெளிவடைவீர்கள். பதவிகள் தேடி வரும். வங்கிகள், பங்குச்சந்தை மூலம் பணம் வரும். அரசாங்க விஷயம் சாதகமாகும்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் செல்வதால், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். திடீர் பணவரவு உண்டு. தைரியமாக முடிவெடுப்பீர்கள். வீடு, வாகனம் வாங்குவது, விற்பது இலாபம் தரும். வழக்கு சாதகமாகும். தாயாரின் உடல்நிலை சீராகும்.

26.6.13 முதல் 28.8.13 வரை! 27.1.14 முதல் 12.4.14 வரை ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்வதால், ஈகோ பிரச்னையால் தம்பதிக்குள் பிரிவு, மனைவிக்கு சிறு அறுவை சிகிச்சை வந்துபோகும்.

29.8.13 முதல் 26.1.14 13.4.14 முதல் 12.6.14 வரை, உங்களின் பாக்கிய-விரயாதிபதியான குருவின் சாரத்திலேயே குரு செல்கிறார். நல்லது நடக்கும். குழந்தைப் பாக்கியம் உண்டு. வேலைக்கான முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சினை தீரும்.

13.11.13 முதல் 26.1.14 வரை புனர்பூசத்திலும், 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரையிலும் குரு வக்ர கதியில் செல்வதால், வருமானம் உயரும். மகளின் திருமணம் சிறப்பாக நடந்தேறும். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். வீடு கட்டி புதுமனை புகுவீர்கள்.

வியாபாரத்தில், சந்தை நிலவரம் அறிந்து செயற்பட வேண்டும். புது சலுகைகளால் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவது, மாற்றுவது குறித்த முயற்சிகளில் இறங்குவீர்கள். பங்குதாரர்கள், தங்களின் பங்கை கேட்டு தொந்தரவு தருவர். உணவு, போக்குவரத்து, புத்தக வெளியீடுகள், அழகு சாதனப் பொருட்களால் இலாபம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில், உழைப்புக்கு ஏற்ற இலக்கை அடைய முடியாமல் ஆதங்கப்படுவீர்கள். அதிகாரிகளின் ஆதரவு கூடும். வேலைச்சுமை அதிகரித்தாலும் சளைக்காமல் செய்து முடிப்பது நல்லது. விரும்பத்தகாத இடமாற்றம் வரும். எதிர்பார்த்த பதவி, சம்பள உயர்வு சற்று தாமதமாகக் கிடைக்கும்.

கன்னிப்பெண்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நல்ல திருமணம் அமையும். மாணவர்கள், கூடாத நட்பைத் தவிர்க்கவும். விரும்பிய கல்வி நிறுவனத்தில் போராடி இடம் பிடிப்பீர்கள். கலைத் துறையினர், விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவார்கள். அரசியல்வாதிகள் சகாக்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ள வேண்டாம்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி வேலைச் சுமையை தந்தாலும், மனப்பக்குவத்தால் உங்களை வெற்றி பெற வைப்பதாக அமையும்.

**பரிகாரம்:** ஏழை மாணவனின் கல்விக் கட்டணத்தை செலுத்துங்கள். குருவருள் கூடி வரும்.

(தொடரும்....)

# ஆலயத்திற்குரிய காணி உறுதி

# புனருத்தாரண சபையிடம் கையளிப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராமத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள முத்துமாரி அம்பாள் ஆலயத்தோடு ஒரே வீதியில் அமைந்துள்ள மண்டைதீவு கற்பக விநாயகர் ஆலயம் மற்றும் முருகன் கோவில் அமைந்திருந்த நிலம் ஆகியன பொதுக்கோவிலுக்குரியதாக அறிக்கையிடப்பட்டு ஆலய புனருத்தாரண சபையிடம் உரியவர்களால் உறுதியும் சமர்ப்பிக்கப்பட்டது.

உரிமையாளரான வினாசித்தம்பி சீவரத்தினம் என்பவரது மரபுரிமையாளர்களான ச.வர்ணலிங்கம் குடும்பத்தினரும், சீ.மகேந்திரராசாவும் கோவிலுக்குரிய சுமார் 7 பரப்புக்காணிக்கான் உறுதியை கையொப்பமிட்டு புனருத்தாரண சபையிடம் கையளித்தனர்.

உறுதி கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தின் போது இடம்பெற்றது.

நீண்ட காலமாக சிதைவடைந்து காணப்பட்ட இவ்வாலயம் 1991 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வால் முற்றுமுழுதாக தரைமட்டமாக சிதைவடைந்தது.

இந்தப் பழமை வாய்ந்த ஆலயம் சிதைந்து பூசை வழிபாடு இல்லாது இருக்கும் காட்சி மண்டைதீவோடு எந்தவித தொடர்புமற்ற இலங்கையின் தென்பகுதியான மாத்தளையில் வசிக்கும் சுகுணராசன் தம்பதிகளுக்கு கனவில் பல முறை தென்பட்டதாகவும், மண்டைதீவு கிராமம் எங்குள்ளதென்பது அறியாத இவர்கள் மல்லாவியிலுள்ள விநாயகர் ஆலய குருக்கள் மூலமாக மண்டைதீவுக்கு வந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகெண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர்கள் தமது செலவில் கோவிலின் மூலஸ்தான கட்டடத்தைக் கட்டுவதற்கும், அதில் விநாயகரை பிரதிஷ்டை செய்ய விரும்புவதையும், 'மண்டைதீவுப்' பகுதி மக்களுக்குத் தெரிவித்ததன் நிமித்தம் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு ஆலயம் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(23)

## புத்தகதின போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஊர்காவற்றுறை பொது நூலகத்தால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

க்ட்டுரை

கீழ்ப்பிரிவு

யோ.தேனுகா 1 ஆம் இடம், ஜெ.ஜெயநிசாந்தி 2 ஆம் இடம், யோ.பவித்திரா 3 ஆம் இடம்.

சுவரொட்டி

மத்தியபிரிவு

எஸ்.துவாரகன் 1 ஆம் இடம், எஸ்.நாகசுரேன் 2 ஆம் இடம்,. எ.ஜெனிக்பர், 3 ஆம் இடம். (65)

# கருத்து முரண்பாடு கைகலப்பில் முடிந்தது

(அராலி)

அராலி செட்டியாமடம் பகுதியில் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பில் முடிந்ததால் 3 நபர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செட்டியாமடம் சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் அங்கத்தவரும், பொருளாளரும் விளையாட்டுக்கழகத்தில் விளையாடிவிட்டு உதைபந்தாட்ட சீருடையை வழங்குமாறு கூற அதைத் தரமுடியாது என தகாத வார்த்தைகளால் ஏசியதை அடுத்து கோபம் கொண்ட பொருளாளர் அவரைத்தாக்க முற்றபட்டபோது அங்கிருந்த அங்கத்தவர்கள் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பினர்.

எனினும் வீடு சென்ற அங்கத்தவர் போத்தலை எடுத்து வந்து பொருளாளரின் மண்டையை உடைத்துவிட்டு ஓடிவிட்ட நிலையில் அவரைக் கண்டுபிடிக்கச் சென்றவர்களை குறித்த நபர் தனது கையில் இருந்த மீதிப்போத்தல்களால் வெட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காயமடைந்த 3 நபர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும், குறித்த கழக அங்கத்தவர் ஏற்கனவே ஏற்பட்ட பிரச்சினையால் 3 மாதங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், வட்டுக்கோட்டை பொலிஸாரூடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக கழகத் தலைவர் தெரிவித்தார். (180)



யாழ்.மாவட்டத்திலிருந்து இளைஞர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது, இளைஞர் நாடாளுமன்ற எதிர்க்கட்சியின் விளையாட்டுத்துறை நிழல் அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட கே.புவி இளைஞர் திறன் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும முன்னிலையில் பதவியேற்பதையும், தெரிவாகிய உறுப்பினர்களையும் காணலாம்.

(65)

# டைனமற் மூலம் மீன்பிடித்தவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறைப் பகுதியில் டைனமற் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட மீனை வைத்திருந்த ஒருவருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன், இனிமேல் இவ்வாறு செயற்படக்கூடாது என்றும் எச்சரித்து நேற்றுமுன்தினம் விடுதலை செய்துள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி கொழும்புத்துறைக் கடற்பகுதியில் வைத்து டைனமற் பயன்படுத்திப்பிடிக்கப்பட்ட மீனை வைத்திருந்த மூவர் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக கடந்த மாதம் 24 ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றத்தில் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இநத வழக்கு விசாரணையை அடுத்து வழக்கு நேற்றுமுன்னைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றம் குறித்த மூவரில் பிரதான குற்றவாளிக்கு ஒரு இலட்சம் ரூபா தணடம் விதித்ததுடன் இனிவரும் நாடகளில் இவ்வாறு செயற்படக் கூடாது என்றும் நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் எனைய இருவரும் இவருடன் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா)

# ஆங்கில டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

ஆங்கிலப் பட்டதாரிகளுக்கு பதில் ஆங்கில டிப்ளோமாதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்தார். இதற்கான அனுமதியை அமைச்சரவையிலிருந்து பெறவுள்ளதாகவும் அமைசசரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்தார்.

ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியரகள் 1000 பேரை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு எடுத்த போதும் ஆங்கிலப் பட்டதாரிகள இல்லாத காரணத்தினால் ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆங்கில ஆசிரியர் நியமனத்திற்கு சேர்த்துக்கொள்வது என முடிவு செய்யப்பட்டதாகவும் அமைச்சரவையின் ஊடாக இதற்கான அனுமதியைப் பெறத் தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எமது நாட்டிலுள்ள சுமார் 16 இலட்சம் பேர் வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தருகின்றனர். எமது நாட்டிற்கு மேலும் வெளிநாட்டு செலாவணியை பெறவேண்டுமாயின் ஆங்கில மொழி அறிவு மட்டுமல்ல வெளிநாட்டு வேற்று மொழிகளையும் கற்றிருத்தல் அவசியம். அரசின் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மொழிப்பிரிவுகளும் உருவாக்கப்படவுள்ளன.

ஒழுங்கான முறையில் கல்வித்திட்டம் அமையாத காரணத்தால் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

இனிவரும் காலங்களில் இந்நிலை தோன்றாத வகையில் கல்வியில் திருப்பம் செய்யப் பட்டுள்ளது. எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகள், பாண்டித்தியம் பெற்றவர்களை உருவாக்க வேண்டிய தேவை நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள், நாட்டின் மீதும் மாணவ சமுதாயத்தின் மீதும் பற்றுக்கொண்டவர். அவர் இன்னும் 50 அல்லது 100 வருடங்கள் தீர்க்க தரிசனமாக சிந்திக்கக் கூடியவர் என்றும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஒவ்வொரு மாணவனும் முதலாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை கிராமத்து பாடசாலையில் கல்வி கற்கவும் 6 முதல் உயர்தரம் வரை இரண்டாம் நிலை பாடசாலைகளில் கற்கும் விதத்தில் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# முதல்நான்கு மாதத்தில் 738பேர் விபத்தில் மரணம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 738 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2,061 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டது. குறித்த காலப்பகுதியில் 689 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுபோதை மற்றும் கவ்னக் குறைவுடன் வாகனம் செலுத்தியமையினால் இவ்வாறான விபத்துக்கள் சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இடம்பெற்ற விபத்துக்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தேசிய பாடசாலைகளுக்கு நியுமிக்கப்படாத அதிபர்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் விசனம்

(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய் பாடசாலைகளுக்கு இதுவரை அதிபர்கள் நியமிக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்ட போதிலும் தகுதியானவர்களை அதிபர் வெற்றிடங்களுக்கு நியமிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவிவ்லை என அந்தச் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஒருசில தேசிய பாடசாலைகளுக்கு பதில் அதிபர்களை நியமிப்பதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவிக்கையில், நேர்முகத் தேர்வுகளின்போது தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனினும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு அந்தப் பெயர்ப் பட்டியலை அங்கீகரித்து அதனை இதுவரை கல்வி அமைச்சுக்கு அனுப்பாமையே தாமதத்திற்கு காரணம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக அநேகமான பாடசாலைகளுக்கு பதில் அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

# நீதவானுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)



ஹோமாகம மாவட்ட நீதவான் சுனில் அபேசிங்கவை எதிர்வரும் மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார். மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொள்வதற்கு முயன்ற வேளை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

காணிப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கே நீதவான், ஹோட்டல் உரிமையாளரிடமிருந்து மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொள்வதற்கு முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# போஷாக்கு மட்டம் வீழ்ச்சி சுகாதார அமைச்சு கவலை

(கொழும்பு)

இலங்கையின் போஷாக்கு மட்டம் தொடர்பான தரவுகள் திருப்திகரமாக இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சுகாதார பராமரிப்பு நிலை உயர் மட்டத்தில் இருந்தபோதிலும் போஷாக்கு சுட்டெண் பின்னடைவை சந்தித்துள்ளதாக அமைச்சின் போஷாக்கு இணைப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சாந்தி குணவர்தன கூறியுள்ளார்.

குறிப்பாக நிறை குறைந்த பிள்ளைகள் பிறக்கின்றமை கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாரின் குருதிச்சோகை, பிள்ளைகள் வயதுக்கு ஏற்ப வளர்ச்சியடையாமை மற்றும் நகரப் பகுதிகளில் வாழும் பிள்ளைகளின் உடற் பருமன் போன்ற பல்வேறு போஷாக்கு சார்ந்த பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் வழமைபோன்று இந்த வருடமும் ஜூன் மாதத்தை தேசிய போஷாக்கு மாதமாக பிரகடனம் செய்துள்ளதாக டொக்டர் சாந்தி குணவர்தன கூறியுள்ளார்.

தேசிய போஷாக்கு மாதம் முழுவதும் போஷாக்கு சார்ந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மனைவியை காணவில்லை கணவன் முறைப்பாடு

(ஏறாவூர்)

தனது மனைவி காணாமற் போயுள்ளதாகவும் கண்டுபிடித்துத் தருமாறு கோரியும் கணவர் முறைப்பாடு செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள முறக்கொட்டாஞ்சேனை ஏரிக்கரை வீதியைச் சேர்ந்த கந்தையா பிரதீபன் (வய்து - 33) என்பவரே நேற்றுமுன்தினம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

4 பிள்ளைகளின் தாயான 27 வயதுடைய எனது மனைவி பரமானந்தம் சசிகலா கடந்த 16 நாட்களாக காணாமற் போயுள்ளார்.

கடைசியாக 14.05.2013 அன்று எனது மனைவி பிள்ளைகளுடன் வீட்டில் காணப்பட்டார். அதன் பின்னரே அவர் காணாமற் போயுள்ளார். அவரது கையடக்கத் தொலைபேசியும் தற்போது பாவனையில் இல்லை. எல்லா இடங்களிலும் விசாரித்துப் பார்த்தோம். ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தாய் எப்போது வருவார் என குழந்தைகள் எந்த நேரமும் அழுதவண்ணம் உள்ளனர். இந்த நிலையில், எபபடியாவது தனது மனைவியைக் கண்டுபிடித்துத் தருமாறும் தனது குழந்தைகளின் கண்ணீரை துடைக்குமாறும் பாதிக்கப்பட்ட நபர் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். தனது மனைவி காணாமற் போனமை தொடர்பில் ஏற்கனவே மட்டக்களப்பு பொலிஸிலும் தான் முறைப்பாடு செய்ததாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார். இது தொடர்பான விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகப், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை நூற்றுக்கு 14.7 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் 79 ஆயிரத்து 829 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் 3 இலட்சத்து 68 ஆயிரத்து 627 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், இது 11.7 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டுப் பணியாளர்களை பதிவு செய்யக்கோரிக்கை

பதிவுகள் காலாவதியாகிய நிலையில் இலங்கையில் பணிபுரியும் வெளிநாட்டுப் பணியாளர்கள் உடனடியாக தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. பதிவுகள் காலாவதியாகியுள்ளதால் வெளிநாட்டுப் பணியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு பல்வேறு சலுகைகள் இழக்கப்படுவதாக அவ்ர் தெரிவித்துள்ளார். குறிப்பாக மீண்டும் பதிவுசெய்துகொள்வதால் அவர்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைப்பதுடன் காப்புறுதியும் நீடிக்கப்படுவதாக பிரதிப் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். பதிவு காலாவதியானவர்கள் மூன்று மாதங்களுக்குள் தம்மை மீளப் பதிவுசெய்து கொள்வதால் வெளிநாட்டுப் பணியாளர்கள் மேலும் பல நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவார்கள் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது

# இனவாதம், மதவாதத்திற்கு என்றுமே அடிபணிந்ததில்லை

## என்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)



எனது அரசியல் வாழ்க்கையில் இனவாத மற்றும் மதவாதத்திற்கு ஒருபோதும் அடிபணிந்ததில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அந்த பலசேனா, இந்த பலசேனா என எந்த பலசேனா வந்தாலும் எம்மைப் போன்ற மனிதர்களை கீழே தள்ள முடியாது.

கௌதம புத்தரின் தத்துவங்களில் எந்த இடத்திலும் சிங்கள பௌத்தம் பற்றி வலியுறுத்தியதில்லை. கௌதம புத்தர் ஜாதி என்பது எதுவென்பதனை தெளிவாக விளக்கியுள்ளார்.

உண்மையில் ஜாதி என்பது மனித ஜாதியையே குறிக்கும் என கௌதம புத்தர் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்.

பௌத்த தர்மத்தில் எந்தவொரு இடத்திலும் பிக்குகள் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படவில்லை.

பொலிஸாருடன் அடித்துக் கொள்ளுமாறு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

வீதிகளில் இறங்கி கொலை செய், கொடு, வெட்டுவேன் என கோசமிடுமாறு பௌத்தர்மத்தில் குறிப்பிடப்படவில்லை. உலகின் பல நாடுகளில் மதங்களுக்கு இடையில் வாதங்கள் நடைபெற்றன. எனினும், அவை கை கால்களைப் பயன்படுத்தி நடத்தப்படவில்லை அவை, புத்தியூடாக நடத்தப்பட்டது என அமைச்சர் சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

11) வினாக்களுக்கு விடை தருக.

1. இலங்கையின் துறைமுகங்கள் அமைந்துள்ள இடங்கள் இரண்டைத் தருக.

1) ---------------------------- 2) ----------------------------




12) கணித வினாக்களுக்கு விடை தருக.

1. 4 cm அகலமும் 8 cm நீளமும் கொண்ட மூன்று காகித அட்டைகளைக் கொண்டு அருகில் உள்ள உரு தயாரிக்கப்பட்டுள்ளது. A, B யின் நீளத்திற்கும் C, D யின் நீளத்திற்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு?

--------------------------------------------------------------------------------

2. கலன் ஒன்றில் இருந்த 5 $l$ தேனில் 2 $l$ 225 ml தேன் பாவிக்கப்பட்டால், மிகுதியாக இருக்கும் தேனின் அளவு யாது?

--------------------------------------------------------------------------------

3. 1 kg வெண்டிக்காய் 52 ரூபாவாகும். 1 kg 750 g நிறையுள்ள வெண்டிக்காய்க்காக எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

4. $1\frac{1}{2} + 1 + \frac{1}{2} =$ ---------------------



5. இத்திண்ம உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ----------------------------

6. உச்சிகளின் எண்ணிக்கை யாது?

7. 

A யில் இருந்து B வரைக்குமான தூரம் 160 m ஆகும். எனின்

8.  இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை?

9. 10 மாம்பழங்களின் விலை ரூபா 95 ஆகும். எனின் ஒரு மாம்பழத்தின் விலை யாது?

10. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருடகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு விமானம் | ரூபா 70 | 10 |
| அசையும் பொம்மை | ரூபா 120 | 03 |
| சிறிய பொம்மை | ரூபா 55 | 10 |
| விளையாட்டுக்கார் | ரூபா 27 | 21 |
| ஊதி | ரூபா 135 | 10 |

1. குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது?
2. அன்றையதினம் அசையும் பொம்மையின் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு?

### வினாவிற்குரிய விடைகள்

**(01)** 1. காலைக்காட்சி 2. ஒளி / வெளிச்சம் 3. மலை 4. குளிர்நிலவு 5. ஆலயங்களில் 6. விண்மீன்கள், நிலா 7. ஆலயங்கள் 8. நட்சத்திரங்கள் 9. மேல் + எழுகிறான் 10. அவை **(02)** 1. அந்தம் 2. தோய்ந்து **(03)** 1. குலங்கள் 2. தண்டனைகள் **(04)** 1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தது/பசுக்கூட்டங்கள் புல் மேய்ந்தன 2. தாவரங்கள் காபநீரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றன. 3. மான்கூட்டங்கள் நீர் அருந்தின. **(05)** 1) Listen please 2) May I come in **(06)** 1. நான் சாப்பிடுகிறேன் 2. தண்ணீர்போத்தல் **(07)** 1.நீங்கள் கடைக்குப் போகின்றீர்களா? 2. எனது விளையாட்டு வீடு **(08)** 1. விஷபம்தையல்/மெசின்தையல் 2.புள்ளடித்தையல் **(09)** 1. 4 2. 4 3. 2 4. 4 5. 2 6. 1 7. 1 8. 4 9. 2 10. 2 11. 1 12. 2 13. 2 14. 1 15. 3 **(10)** 1. இருவேரி 2. நாயுருவி 3. இலைப்பசளி 4. ஆடாதோடை **(11)** 1. 1) திருகோணமலை 2) அம்பாந்தொட்டை **(12)** 1. 4cm 2. 2 $l$ 775m $l$ 3. 91.00 4. 3 5. 04 6. 04 7. 40m 8. 01 9. 9.50சதம் 10. 1) 54 2) ரூபா360.00



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013 1.30 மணி

# கல்வி முரசு



ஆசிரியர் : A.K.S. நிஸானா ஹில்மி

01) பின்வரும் பந்தியைத் தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

பொழுது புலர்ந்தது இருள் கவிழ்ந்து மூடி இருந்த திரை மறைகின்றது. விண்மீன்களதும் தண்ணிலாவினதும் கொட்டம் ஒடுங்குகின்றது. சூரியனின் வரவு கண்டு அவை ஒளிமழுங்கித் தோற்று ஒடுகின்றன. ஆலயங்கள் எங்கும் மணியொலி ஆர்க்கின்றது. பூஜைகள் நடைபெறுகின்றன. விண்மிசை வெண்ணிறமாக விளங்கிய ஆதவன் உதய கிரியில் இருந்து மேலெழுகின்றான்.

1. பந்தி குறிப்பிடும் காட்சி எதுவாகும்? ----------------------------
2. இருள் என்னும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லைத் தருக? ----------------------------
3. கிரி எனும் சொல்லுக்கு ஒத்தசொல்லைத் தருக. ----------------------------
4. தண்ணிலா என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது?
5. மணியொலி எங்கு ஆர்க்கின்றது?
6. சூரியனின் வரவு கண்டு எவை ஒளிமழுங்கி தோற்றுப்போகின்றன?
7. அஃறிணை, பன்மை, படர்க்கை, பெயர்ச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.
8. விண்மீன்கள் என்றால் என்ன?
9. மேலெழுகிறான் என்பதை பிரித்தெழுதுக?
10. அது எனும் சொல்லின் பன்மைச் சொல்லைத் தருக?

02) பின்வரும் இணைமொழிகளின் குறைகளை பூர்த்தி செய்து எழுதுக.

1. ஆதி ---------------------------- (அடி, முடிவு, தொடக்கம், அந்தம்)
2. ஆய்ந்து ---------------------------- (தோய்ந்து, காய்ந்து, வறண்டு)

03) கோடிட்ட சொல்லுக்கான பொருளை தெரிவு செய்து கோடிடுக.

1. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் பாடினார்.
(மதங்கள், குலங்கள், கிளைகள்)

2. அடித்தாரைச் சொல் ஆக்கினைகள பண்ணிடுவோம்.
(சொல்லடிகள், வேதனைகள், தண்டனைகள்)

**04) பின்வரும் வாக்கியங்களை திருத்தி எழுதுக.**

1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தன. ------------------------------
2. தாவரங்கள் காபனீரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றது. ------------------------------
3. மான்கூட்டம் நீர் அருந்தின. ------------------------------

**05) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1) தயவு செய்து செவிமடுக்கவும். ------------------------------
2) நான் உள்ளே வரலாமா? ------------------------------

**06) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am eating ------------------------------ 2) Water Bottle ------------------------------

**07) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. ඔයා කෑවද යනවා ද? ------------------------------
2. මගේ සෙල්ලම් ගෙදර ------------------------------

**08) பின்வரும் தையல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1)  ------------------ 2)  ------------------

**09) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கறுப்பு நிறத்துடன் கபில நிறமும் கொண்ட பறவை எது?
   1) மரங்கொத்தி 2) பஞ்சவர்ணக்கிளி 3) மீன்கொத்தி 4) செண்பகம்
2. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படும் அரசிலைகள் பல கருத்துக்களை விளக்குகின்றன. அதில் ஒரு கருத்தாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1) சத்தியம் 2) வாக்குறுதி 3) விடுதலை 4) காருண்யம்
3. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை பிடித்து உண்ணக்கூடியது எது?
   1) நத்தை 2) கும்பிடுபூச்சி 3) கருவண்டு 4) வெட்டுக்கிளி
4. வடமாகாணத்தில் அமைந்திராத மாவட்டம் ஒன்று
   1) வவுனியா 2) முல்லைத்தீவு 3) யாழ்ப்பாணம் 4) மட்டக்களப்பு
5. பூகோளத்தில் இலங்கைக்கு வடக்கே மிக அருகில் அமையப் பெற்றுள்ள நாடு
   1) வங்களாதேசம் 2) இந்தியா 3) பூட்டான் 4) பாகிஸ்தான்



6. நல்ல நெல்லிலிருந்து பதர் நெல்லை வேறாக்குவதற்குப் பயன்படுவது?
   1) குல்லம் 2) மரக்கால் 3) பரம்புப்பலகை 4) கடகம்
7. பழங்காலத்தில் தகவல்களை அறிவிப்பதற்காகப் பயன்படுத்தியது?
   1) பறை 2) கடிதம் 3) தந்தி 4) பெக்ஸ்
8. வாழ்க்கை வட்டத்திற்கு அமையத் தனது இனத்தைப் பெருக்கிக் கொள்ளும் பிராணி
   1) நத்தை 2) இராமபாணம் 3) திமிங்கிலம் 4) நுளம்பு
9. நீர்ச்சக்கரம் ஒன்றின் சுழற்சியை அதிகரிக்கக்கூடிய வழிகளில் ஒன்று
   1) பற்சில்லுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
   2) பற்சில்லுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
   3) பற்சில்லுகளுக்கிடையிலான இடைவெளிகளை அதிகரித்தல்.
   4) நீர் விழும் உயரத்தின் நீளத்தைக் குறைத்தல்.
10. பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகைகளை சமைத்து உண்ணும்போது ஏற்படக்கூடிய விளைவு?
   1) போசணைத்தன்மை அதிகரிக்கும் 2) போசணைத்தன்மை குறைவடையும்
   3) உணவு நஞ்சாகக் கூடும். 4) சுவை குறையும்.
11. வரலாற்றில் வீரம் பொருந்திய மன்னனாக கருதப்படுபவன்.
   1) துட்டகைமுனு 2) காசியப்பன் 3) முகலன் 4) பண்டுகாபயன்
12. குருதிச்சோகை நோய் ஏற்படுவதற்கு காரணம்
   1) கல்சியம் குறைபாடு 2) இரும்புச்சத்து குறைபாடு
   3) புரதக் குறைபாடு 4) விற்றமின் குறைபாடு
13. வீட்டின் உள்ளே வளர்க்கப்படும் பிராணி
   1) பசு 2) பூனை 3) எலி 4) நாய்
14. நிரைச் சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம்
   1) குளோரின் 2) கொண்டிஸ் 3) அற்கஹோல் 4) தேங்காய்எண்ணெய்
15. மின்குமிழ்கள் இரண்டும் ஒளிரும்படி ஒழுங்கு செய்யப்பட்ட அமைப்பு எது?




**10) பின்வரும் தாவரங்களுக்கான பெயர்களை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

இலைப்பசளி , நாயுருவி, ஆடாதோடை, இருவேரி, வசம்பு



1. ------------------ 2. ------------------ 3. ------------------ 4. ------------------

# “ரன்பக்சி” நிறுவன மருந்துகளை அதிகம் பரிந்துரைக்க வேண்டாம்

## தமிழக மருத்துவர்களுக்கு அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில், “ரன்பக்சி” நிறுவன மருந்துப் பொருட்களை, அதிகம் பரிந்துரைக்க வேண்டாம் என, தமிழக டொக்டர்களுக்கு, இந்திய மருத்துவக் கழகத்தின், தமிழ்நாடு பிரிவின் சார்பில், அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்று, ரன்பக்சி. சில தினங்களுக்கு முன், கலப்பட மருந்துப் பொருட்களை விற்பனை செய்ததற்காக, அமெரிக்க உணவு மற்றும் மருந்துப்பொருள் நிர்வாகம், ரன்பக்சி நிறுவனத்திற்கு, 500 கோடி அமெரிக்க டொலர் அபராதம் விதித்தது. இதையடுத்து, மும்பையின் பிரபல மருத்துவமனைகள், ரன்பக்சி மருந்துகளை பரிந்துரைப்பதை குறைத்து கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

ரன்பக்சியின் தயாரிப்புகள் மற்றும் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ள பொருட்களில், ஆய்வு நடத்த, இந்திய மருத்துவக் கழகம், இந்திய மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளது. ரன்பக்சி நிறுவனம், தன் தரத்தை உறுதிப்படுத்தும் வரை, தமிழ்நாட்டில், அந்நிறுவன மருந்துகளை பரிந்துரைப்பதை குறைத்துக் கொள்ளுமாறு, இந்திய மருத்துவக் கழகத்தின் தமிழ்நாடு பிரிவு, டொக்டர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியச் செய்திகள்

# ஏழு கோடியைத் தாண்டிய தமிழக மக்கள் தொகை

(சென்னை)

தமிழகத்தின் மக்கள் தொகை 7 கோடியை எட்டியது.

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்குப்படி 7 கோடியே 21 இலட்சத்து 47 ஆயிரத்து 30 ஆகும். இதில் ஆண்கள் 3 கோடியே 61 இலட்சத்து 37 ஆயிரத்து, 975 ஆம் பெண்கள் 3 கோடியே 60 இலட்சத்து 9 ஆயிரத்து 55 ஆகும்.

நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் 3 கோடியே 49 இலட்சத்து 17 ஆயிரத்து 440 ஆகும். கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் 3 கோடியே 22 இலட்சத்து 29 ஆயிரத்து 590 ஆகும்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தின் மக்கள் தொகை 97 இலட்சம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கனிமொழி எம்.பி.க்கு கொலை மிரட்டல்



(சென்னை)

கனிமொழி எம்.பி.க்கு முஸ்லிம் அமைப்பு ஒன்றின் பெயரில் மிரட்டல் கடிதம் அனுப்பபட்டுள்ளது.

கடந்த 2 நாட்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் பரபரப்பான வாசகங்கள் இடம் பெற்றிருந்தன. உங்களிடம்தான் நிறைய பணம் உள்ளதே எங்கள் அமைப்பை வலுப்படுத்துவதற்கு அதில் குறிப்பிட்ட தொகையை நீங்கள் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் உங்களது உயிருக்கு ஆபத்து என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

எங்களது அமைப்பை தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வலுப்படுத்த உள்ளோம். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாங்கள் சொல்கிறதை செய்யாவிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

# இலங்கையில் சீதைக்கு கோவில் கட்ட முடிவு



இலங்கையில், சீதா தேவி தீயில் இறங்கிய இடத்தில், ஒருகோடி ரூபாய் செலவில், கோவில் கட்டப்படும் என, மத்திய பிரதேச மாநில முதல்வர், சிவராஜ் சிங் சவுகான் அறிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கியுள்ளது என்று பன்னா மாவட்டத்தில் உள்ள குன்ஹார் என்ற இடத்தில் நடந்த விழாவில், முதல்வர் சிவராஜ் இத்தகவலைக கூறினார்.

‘கோவில் கட்டுவதற்கு, மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், இதற்கான பணி துவக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



# பாகிஸ்தானுடனான பேச்சை முறித்துக்கொண்டது தலிபான்



தலிபான் துணைத் தலைவர் வாலி-உர்-ரஹ்மான் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசுடன் இனிமேல் பேச்சு நடத்தப் போவதில்லை என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது. தாக்குதலை தீவிரப்படுத்தப் போவதாகவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தானில் சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைமையில் ஆட்சியமைக்கப்பட்டதும் பாகிஸ்தானில் செயற்படும் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பினருடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் வடக்கு வஜிரிஸ்தானில் மிரான்ஷா பகுதிக்கு அருகே அமெரிக்க உளவுத் துறையின் ஆளில்லா விமானத் தாக்குதலில் தெஹ்ரிக்-இ-தலிபான் துணைத் தலைவர் வாலி-உர்-ரஹ்மான் கடந்தபுதன் கிழமை கொல்லப்பட்டார். இதையடுத்து தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இசானுல்லா இஷான் கூறியுள்ளதாவது:

வாலி-உர்-ரஹ்மான் கொல்லப்பட்டது அதிர்ச்சியளிக்கிறது. அவரது தியாகத்தை போற்றுகிறோம். பாகிஸ்தான் அரசு தகவல் தராமல் இந்தத் தாக்குதலை அமெரிக்காவால் நிகழ்த்தியிருக்க முடியாது. பாகிஸ்தான் அரசுடன் இனிமேல் எந்த விதமான பேச்சும் நடத்தப் போவதில்லை. வாலி-உர்-ரஹ்மானின் மரணத்துக்குப் பழி வாங்குவோம். தொடர்ந்து தாக்குதலைத் தீவிரப்படுத்துவோம் என்று தெரிவித்துள்ளார். வாலி-உர்-ரஹ்மானின் மறைவை அடுத்து தெஹ்ரிக்-இ-தலிபான் துணைத்தலைவராக கான் சயீத் என்ற சாஜ்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகச் செய்திகள்

# ஜப்பானில் ௬௦ பிரதமர்களின் ஆட்சியை கண்டவர் உயிருடன்



உலகில் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரே ஒரு ஆண் ஜப்பானில் வாழ்ந்து வருகிறார். 116 வயதான ஜிரோமோன் கிமூரா தன் வாழ்நாளில் நான்கு மன்னர்கள் மற்றும் 60 பிரதமர்களின் ஆட்சியை கண்டுள்ளார். ஜப்பானின் கியோடோவில் வசிப்பவர் கிமூரா 116. இவர் உலகின் மூத்த குடிமகனாக கருதப்படுகிறார். இவர் 1897 ஏப். 19இல் பிறந்தவர். உலகில் 19ஆம் நூற்றாண்டில் பிறந்த 22 பேர் உயிருடன் இருக்கிறனர். இதில் கிமூரா மட்டுமே ஆண். மற்றஇ 21 பேரும் பெண்களே. இன்றும் ஆரோக்கியத்துடன் இருக்கும் கிமூரா நண்பர்களுடன் அவ்வப்போது மது அருந்தினாலும் புகையை அறவே வெறுப்பவர்.

குறைந்த உணவு உட்கொள்ளும் இவர் அதிக நேரம் உறங்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளார். வீட்டில் தன் மருமகள் மற்றும் பேர்த்தியுடன் இருக்கும் கிமூரா அவர்களுக்கும் ஆரோக்கியமாக வாழ. கற்றுக் கொடுத்துள்ளார். ஜப்பானில் 110 வயதைக் கடந்தவர்களை "சூப்பர் சென்டினிரியன்ஸ்" விருது வழங்கி அந்நாட்டு அரசு கௌரவிக்கிறது. இவரும் அந்த விருதைப் பெற்றுள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் 110 வயதைக் கடந்த 200 இற்கும் மேற்பட்ட நபர்கள் உயிர் வாழ்கின்றனர். இருப்பினும் அவர்கள் அனைவரிடமும் சரியான வயது சான்றிதழ் இல்லாததால் இதுவரை 60 பேர் மட்டுமே அதிகாரபூர்வமாக 110 வயதைக் கடந்து உயிர் வாழ்பவர்களாக அறிவிக்கப்பட் டுள்ளனர்.

இதில் ஜப்பான் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

# பயணி தற்கொலைமுயற்சி தரையிறக்கப்பட்டது விமானம்



அமெரிக்காவில் இருந்து சீனாவிற்கு புறப்பட்ட விமானத்தில் பயணி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததால் அவசரமாகத் தரையிறங்க நேரிட்டது.

யுஎ 851 என்ற அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று கடந்த புதன்கிழமை சீனாவின் தலைநகரான பீஜிங்கிற்கு புறப்பட்டது.

விமானம் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கழிவறைக்குச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் அவர் வெளியில் வராததைக் கண்ட பணிப்பெண்கள் கதவைத் தட்டியுள்ளனர். வெளியே வர மறுத்த அந்தப் பயணி அறைக்குள் தற்கொலைக்கு முயன்றது தெரியவந்தது. இதனால் விமானத்தை அலாஸ்காவில் உடனடியாகத் தரையிறக்க நேரிட்டது. விமானம் தரையிறங்கியவுடன் அந்தப் பயணி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அவரது தற்கொலை முயற்சிக்கான காரணத்தை விமான நிறுவனம் தெரிவிக்கவில்லை.

# பால்தேநீர் தயாரிக்க சுரக்கிறது தாய்ப்பால்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராக, பாடகியாக வலம் வரும் மைலீன் கலாஸ் ஷொக்கான ஒரு விஷயத்தை பகிர்ந்து கொண்டிருக்கிறார். பாரம்பரியம் என்ற பெயரில் தமது தாய்ப்பாலில்தான் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் டீ போட்டுக் கொடுக்கிறாராம்.. அதென்னங்க பாரம்பரியம் என்று கேட்டால் எங்கப்பா இப்படித்தான் செய்தார் என்கிறார் மைலீன் கலாஸ்... மைலீன் கலாஸின் தந்தை ஒரு இராணுவ அதிகாரி.

அவர் தமது மனைவியின் தாய்ப்பாலில்தான் டீ போட்டுக் குடித்து சந்தோஷப்பட்டாராம்.. அதைப் பார்த்து தாமும் அதையே பின்பற்றத் தொடங்கிவிட்டாராம். இதில் எவ்வளவு சந்தோஷம் இருக்கிறது தெரியுமா..

இந்த பாரம்பரியம் என் பிள்ளைகளுக்கும் தொடரும் என்கிறார் மைலீன்.. அத்தோடு நிற்கவில்லை.. ஏங்க.. மற்றவர்களும் கூட இதை பின்பற்றுங்களேன் என்கிறார்.

# வாரம் ஒரு காரம்



## போற்றுதலா?... தூற்றுதலா?... புரியவில்லை

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் போற்றுகின்றார்களா?... தூற்றுகின்றார்களா? தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்கின்றார்களா?... அல்லது நிராகரிக்கின்றார்களா? படித்தவர்கள் பெரியவர்கள், மதத்தலைவர்கள் மத்தியிலும் கருத்து முரண்பாடுகளா? தமிழ் மக்கள் அரசியல் காலம் காலமாகக் குழப்பத்தில் இருப்பதுதான் வரலாறா? எதுவுமே புரியவில்லை.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களை "இரண்டாவது பிரபாகரன்" என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மன்னார் ஆயர் கடும் ஆவேசத்துடன் கடந்த 23 ஆம் திகதி பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்தார். "பிரபாகரன் தனிச்சிறப்புக் கொண்டவர். அவருடன் என்னை ஒப்பிட வேண்டாம். பச்சைப் பொய் கூறி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் குழப்பவும், நாட்டினை தீமை செய்யவும் பொது பல சேனா என்ற இனவாத அமைப்பு முனைந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் என்கின்ற சொல்லே தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் குழப்புமென்கின்றாரா? பிரபாகரன் என்று தன்னைச் சொல்வதுகூட நாட்டுக்கு தீமையை ஏற்படுத்தும் என்கின்றாரா?... அப்படியானால் தனித்துவமானவர் என்று ஏன் கூறுகின்றார்? பிரபாகரன் தன்னைவிட மேலானவர் என்கின்றாரா? அல்லது தன்னை அவரோடு ஒப்பிட்டமையால் ஆத்திரமடைகின்றாரா? எதுவுமே புரியவில்லை! மேலும் இவர் கருத்து வெளியிடும் போது வடக்குக் கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தேர்தலை நடத்த வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளுடன், "பிரபாகரனுடன் என்னை ஒப்பிட வேண்டாம், பிரபாகரன் தனிச்சிறப்புக் கொண்டவர், நான் அவரிற்கு ஒப்பானவர் அல்ல, நான் சமயவாதி, அரசியல் வாதியல்ல, ஆயுதப் போராளியல்ல, சமாதானத்தை விரும்புபவன், ஒருபோதும் நான் தனித்தமிழீழம் கோரவில்லை, தமிழ் மக்கள் ஏனைய மக்களைப்போல சம உரிமைகளுடன் வாழவேண்டும் இதுவே எனது விருப்பம்" என்றார்.

மன்னார் ஆயரின் இந்தக் கருத்து நியாயமானது. ஆயுதவழிப் போராட்டம், தனித்தமிழீழக் கோரிக்கை இவை எல்லாம் இலங்கையின் தரைத்தோற்ற மற்றும் பெரும்பான்மை சிங்களப் போக்குகளிற்கு சாத்தியப்படக்கூடியவை அல்ல என்பதை முன்வைக்கும் ஆயர், சாத்தியப்படாத வழிகளில் நின்று போராடி பல அப்பாவி உயிர்களைப் பலிகொடுத்த பிரபாகரனை ஏன் தனித்துவமானவர் எனக் கூறுகின்றார். சமாதானத்தை விரும்பாத பிரபாகரனில் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட முயலும் ஆயர் - மக்களின் விருப்பத்துக்குரியவர் பிரபாகரன் என்பதற்காகவா இடையிடையே பிரபாகரனை உயர்த்துகின்றார். ஆயரும் தமிழரசுக்கட்சியின் சாயலை நன்கு பிடித்து விட்டாரா? பிரபாகரனின் பெயரை உயர்த்தினால்தான் தங்கள் அரசியல் பயணம் அரங்கேறும் எனும் அரசியல் போலிகளின் சூட்சுமத்தை ஆயரும் அறிந்து விட்டாரா? எதுவுமே புரியவில்லை.

மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து, அம் மக்கள் மத்தியில் நான் நற்பெயரைப் பெறவேண்டும் என்பதற்காக அவர்களின் விருப்புவெறுப்புகளூடாக கருத்துக்களை முன்வைக்கும் போலிமாக்கள் நியாயப்போலி என மெய்யியலில் கூறுவார்கள் (உதாரணமாக) -டார்வினின் கூர்ப்புக்கொள்கையினை ஏற்றுக்கொள்ளாதீர்கள் ஏனெனில் எமது மூதாதையர் எமது பரம்பரைகள் குரங்கிலிருந்து பிறந்தவர்கள் ஆகிவிடுவார்கள். -

இப்படிப்பட்ட ஏமாற்றும் அரசியல் பயணம்தான் த்ற்போது அரங்கேறிக்கொண்டு இருக்கின்றது. இந்த அரசியல் பலவீனங்கள் பெரும்பாலான மக்களுக்கு தற்போது விளங்கி வருகின்றது. இந்தக் கட்டத்தில் இம் மக்கள் மத்தியில் மதிப்புக்குரிய, கௌரவத்திற்குரிய, வணக்கத்திற்குரிய ஆயரவர்கள் எதைக் கூற வருகின்றார் என்பதுதான் புரியவில்லை. ஆங்காங்கே அர்த்தமற்ற முறையில் சுயலாப அரசியலிற்காக அலட்டிக்கொள்ளும் அரசியல் தலைவர்களையும், ஆயரையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. இதுவரை மக்கள் ஏமாற்றப்பட்டதும், ஏமாந்துபோனதும் போதும். இனிவரும் காலத்திலாவது வளர்ச்சியின் பாதையில் வருங்காலத்தைச் செலவிட வேண்டும். அர்த்தமான, யதார்த்தமான கோரிக்கைகள்ளயும் நேர்மையான அரசியல் பாதைகளையும் அமைத்துக்கொள்வது பொறுப்பான தலைவர்களுக்கு அழகாகும்.

– வெண்கட்டியன்

# விதிகளை மீறும் போக்குவரத்து யாழில் இப்போது தாராளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையுமான 5 மாத காலப்பகுதியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விதிமுறைகளை மீறிய போக்குவரத்து குற்றச்செயல்கள் இடம்பெற்றிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு கடந்த 5 மாத காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் கையடக்கத் தொலைபேசி கதைத்துக்கொண்டு வாகனம் செலுத்தியது சம்பந்தமாக 6 வழக்குகளும், தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணித்த 1663 பேருக்கு எதிராக 1663 வழக்குகளும், வாகன வழித்தட அனுமதிப்பத்திரம் (றூட் பொமிற்) இல்லாது வாகனங்களைச் செலுத்தியவர்களுக்கு எதிராக 372 வழக்குகளும் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் கையடக்கத் தொலைபேசி பாவித்தமைக்கு சுமார் 2500 ரூபாவும், தலைக்கவசம் இல்லாது பயணித்தவர்களுக்கு 500 ரூபா வீதமும், வாகன வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லாது பயணித்தவர்களுக்கு 5000 ரூபாவும் நீதிமன்றத்தினால் தண்டம் அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமிக்ஞை விளக்கு இல்லாத லான்ட் மாஸ்ரர், துவிச்சக்கரவண்டி என்பவற்றுக்கு இரவு நேரத்தில் வெளிச்சத்தில் தெரியக்கூடிய ஸ்ரிக்கர்கள் ஒட்டுவதற்கும் பொலிஸாரினாலும் வணிகர் கழகத்தினாலும் செயற்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)



யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கொடியேற்றத்தின்போது யாழ். பல்கலைக்கழக கலைத்துறை மாணவரான சண்முகராசா தவராசாவின் விநாயகர் ஒலிநாடாவை கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவரின் பெற்றோரிடமிருந்து முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம். (105)

## ஊடக ஒழுக்கக் கோவை விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

பொதுவான ஊடக ஒழுக்க விதிகள் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ஊடக அமைச்சர் .கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஊடக ஒழுக்கக் கோவை நாடாளுமன்றில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். உத்தேச வரைவுத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த உத்தேச திருத்தச் சட்டம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினரிடமும் இது குறித்த அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சில ஊடகங்களின் செயற்பாடுகள் சிக்கல்களை தோற்றுவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இவ்வாறான ஒழுக்கக் கோவையொன்றை வகுப்பது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களுக்கும் சமூகத்திற்கும் பாதகம் ஏற்படக்கூடிய வகையில் ஊடகங்கள் செயற்படுவத்னை தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த கந்தப்பு தயாபரன் (வயது - 38) என்பவரது சடலமே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## மின்னல் தாக்கி 14 மாணவர்கள் பாதிப்பு

மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட 14 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கிரிவுல்ல இன்னஹர தவுல வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 14 பேரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மீதே மின்னல் தாக்கியுள்ளதாகவும் அந்த மின்னல் தாக்கத்தினால் அச்சமடைந்த நிலையிலேயே இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்ப்பாணத்தில் தமிழ் படித்த பிக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் பௌத்த பிக்குகள் குழுவொன்று தமிழ்மொழிப் பாடநெறியை பூர்த்தி செய்துள்ளது. கல்வியமைச்சின் மொழிக் கல்விப் பிரிவின் ஆலோசகர் உயன் கல்ல ஞானரதன தேரரின் பங்களிப்புடன் இந்தப் பயிற்சிநெறி வழங்கப்பட்டிருந்தது.

இதுதவிர, பயிற்சி நெறிக் காலத்தில் குறித்த பௌத்த பிக்குகள் குடாநாட்டில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் கலந்து கொணடதோடு, கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களுடன் இணைந்து செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்மொழி கற்பதன் ஊடாக ஏற்படும் சமூக நல்லிணக்கம், மற்றும் திறனபிவிருத்தி என்பன நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பைச் செலுத்தும் என்று உயன்கல்ல ஞானரதன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மத குருமார் பயிற்சிநெறியை நிறைவு செய்து விடுகை பெறும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## யாழ். வருகிறார் நாமல்

நாடாளுமன்ற உறுப்பினரும் நாளைய இளைஞர் அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ நாளை யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

தேசிய உதைபந்தாட்ட அணிக்கு பாடசாலை மாணவர்களை தெரிவு செய்யும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 15 வயதுக்கு கீழ்ப்பட்ட உதைபந்தாட்ட வீரர்கள் 200 பேருக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவர்களில் 30 பேரை தெரிவு செய்து தேசிய உதைபந்தாட்ட அணியில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் பயிற்சிகள், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இனப்பிரச்சினைக்கான...

தனியாக, சுயாதீனமாக செயற்படும் பொலிஸின் நிலைமை என்ன? அரசியல்வாதியாக இருக்கும் முதலமைச்சரின் கைகளில் பொலிஸ், காணி போன்ற முக்கிய அதிகாரங்கள் சென்றால் அது எம்மைப்போன்ற சிறிய நாடுகளுக்கு நன்மையானதா, தீமையானதா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

கேள்வி: 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழித்தால் அது தமிழர் பிரச்சினைத் தீர்வில் சிறிதளவேனும் தாக்கத்தை ஏற்படுத்தாதா?

பதில்: 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தமிழர் பிரச்சினைக்கு எப்படித் தீர்வாகும் என்பதை முதலில் நாங்கள் சிந்திக்க வேண்டும். உதாரணத்துக்கு இரத்தினபுரி மாவட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கிளிநொச்சியில் உள்ள தமிழர்களை விட கூடுதலான தமிழ் மக்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ளனர். இங்கு இருக்கும் சிங்கள முதலமைச்சர் பொலிஸ் அதிகாரங்களைக் கேட்டால் என்ன செய்வது? இது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையேயான பிரச்சினையல்ல. நாங்கள் எப்போதும் அரசியல் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

17 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. என்ன கேட்டார்கள்? என்ன நடந்தது? நாடாளுமன்றம் என்பது உயரிய மேன்மை மிகு சபை. 17 ஆவது திருத்தச் சட்டம் சுயாதீன குழுக்களை நியமிக்குமாறு கேட்கிறது. மறுபுறம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்குச் செல்ல வேண்டுமெனச் சொல்லப்படுகிறது. இப்படி எல்லாவற்றையும் சிறிது சிறிதாக உடைத்துவிட முடியாது. இவற்றைத்தான் அமைதியை சீர்குலைக்கும் செயல்கள் என்று கருதவேண்டும்.

கேள்வி: நீங்கள் கூறுவதன்படி 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கமைய வடக்கு மாகாணத் தேர்தல் நடந்தால் புதிய பிரச்சினைகள் உருவாகும். அப்படியா?

பதில்: நிச்சயமாகப் பாதிப்பு ஏற்படும். வடக்கு மாகாண சபையை சிலவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினால் நிச்சயமாகக் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்கும். நாம் வடக்குக்கு மட்டும் அதிகாரங்களைக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுக்கப் போனால் பெரிதளவில் முரண்பாடுகள் வரும். அது முழு நாட்டுக்கும் பிரச்சினையைத் தரும். இது தேவையற்றது. தமிழர் பிரச்சினைக்கு இது தீர்வாகாது என்பதுதான் எனது நிலைப்பாடு. எல்லா முதலமைச்சர்களும் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்கத் தொடங்கினால் நிலைமை என்னவாகும்?

கேள்வி: 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றம் செய்வது இந்தியாவைக் கோபித்துக் கொள்வது போல் அமையாதா?

பதில்: இந்தியாவோ அல்லது வேறெந்த நாடுகளோ கோபிக்கும் என்பதற்காக நாட்டுக்குத் தேவையான நல்லவற்றை எம்மால் செய்யாமல் இருக்கமுடியாது. 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது என்ன நடந்தது? ஜே.வி.பி முழு நாட்டையும் எரித்தது. பிரபாகரன் அதனை நிராகரித்தார். இந்தியாவுக்குச் சில விடயங்கள் தேவையெனில் அவற்றை நாம் எப்படி நடைமுறைப்படுத்துவது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

### புதிய...

ஏற்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை காரணமாக ஒரு அலுவலர் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் இவ்விடயம் குறித்து பல்வேறு அதிகாரிகளூடாகவும் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக மீண்டும் யாழ். மாவட்டம் உட்பட வன்னி மாவட்டத்திற்கும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (26)

### யாழ். நகரில்...

விஜயம் செய்து நகரின் பிரதான சந்திப் பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு நகர்ப் பகுதியில் பிரதான சந்திகளில் பொருத்தப்பட்டிருப்பது போன்று இந்த வீதிச் சமிக்ஞை விளக்கு குறிகாட்டிகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

### புலிகளின்...

செயற்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்ந்தும் வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாகவே இராஜாங்கத் திணைக்களம் பட்டியலிட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

### விமானத்தை...

இந்தச் சம்பவத்தில் 32 இலங்கை படையினர் கொல்லப்பட்டனர். ஏற்கனவே இந்த விமானம் தொழில்நுட்பக் கோளாறினால், வீழ்ந்து நொருங்கியதாக இலங்கை விமானப்படை நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

எனினும், தீவிரவாத புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளில் இந்த விமானத்தை புலிகள் ஏவுகணை மூலம் சுட்டுவீழ்த்தியதாக தெரியவந்தது. இந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் இருவரும் கடந்த நான்கு ஆண்டுகளாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வேம்பிராயில்...

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வேம்பிராய் பகுதியில் கல்லுடைக்கும் வேலைகள் கல்குவாரிப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. இப்பகுதியில் இனந்தெரியாதோர் துளையிட்டு வெடிமருந்து நிரப்பி கல்லுடைக்க முற்பட்டுள்ளனர். இவ்வாறு முன்னர் வெடிமருந்து நிரப்பப்பட்டதை அறியாத நிலையில் நேற்றுக்காலை கல்லுடைக்கும் வேலைக்காகச் சென்ற பிரஸ்தாப நபர்கள் இருவரும் ஆப்பு அடித்து கல்லுடைக்க முற்பட்ட வேளையில் இவ்வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் தமக்கு இதுபற்றித் தெரியாது எனவும் காயமடைந்தவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

தாம் வேலையை ஆரம்பித்த போது பெரிய வெடிச்சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாகவும் இதனால் கல்லுகளில் அடிபட்டு தாம் பலத்த காயங்களுக்குள்ளானதாகத் தெரிவித்தார்.

இவ்வாறே அண்மையில் இப்பகுதியில் ஒருவர் கல்லுடைக்கும் போது வெடி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொழும்புக்கு பணிகிறதா புதுடில்லி

# விக்கிரமபாகு கருணாரட்ண கேள்வி

ஜனாதிபதி மஹிந்த அடிக்கடி சீனாவுக்கு செல்வதால் சீனா இலங்கைக்குச் சார்பாகவே செயற்படுமென கருதிவிடக்கூடாது. ஏனேனில் இலங்கையை இந்தியா துணிவுடன் எதிர்க்குமானால் அதற்கு சீனாவும் நிச்சயம் பச்சைக்கொடி காட்டும் என்று நவசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தம் வடமாகாண சபைத் தேர்தல் ஆகியன் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலே நவசமஜக்கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை - கல்கிசை மாநகரசபையின் உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை சீனாவின் பக்கம் முழுமையாக சாய்ந்து விடும் என்ற அச்சத்தில் தெற்காசியாவின் வல்லரசான இந்தியா இலங்கையிடம் பணிந்து செல்லுகின்றது. இந்தியா இலங்கையை எதிர்க்காததால்தான் சீனா கூட இலங்கைக்கு ஆதரவு வழங்குகின்றது. இந்தியா துணிவுடன் முதுகெழும்புடன் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமானால் அதற்கு சீனாவும் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்கும். என்பதை டில்லி உணரவேண்டும்.

இலங்கையை விட சீனாவுக்கும் இந்தியாவும், இந்தியாவுக்கு சீனாவும் முக்கியம் பெறுகின்றது. இருநாடுகளுக்கிடையில் பல உதவிகள் இருக்கின்றது. அதே வேளை வடக்குத் தேர்தல் நடைபெறுவது உறுதியானாலும், அதற்கு முன்னர் அரசு செய்ய வேண்டிய காரியங்களைக கச்சிதமாக செய்துமுடித்துவிடும். எனவே வடக்குத் தேர்தல் நீதியாகவும், நியாயமானதாகவும் நடைபெறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்புக்கு விஜயம் செய்துள்ள தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவாத்ரா சிறப்புரையாற்றுவதற்காக நாடாளுமன்றத்திற்கு வருகைதந்தபோது...

## "13" தேவையா? இல்லையா?

## முஸ்லிம் காங்கிரஸ் கூடி ஆராயும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தேவையா? இல்லையா என்ற சர்ச்சைக்குள் முஸ்லிம் காங்கிரஸ் சிக்கியுள்ளது. இவ்விடயம் குறித்து. விவாதிப்பதற்காக நாளை விசேட கூட்டம் ஒன்றை கீட்சி நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு இடையிலாரன இந்த விசேட கூட்டம் தொடர்பாக கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ரஜாப்தீன் அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தின் போது 13 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.பெரும்பாலும் அன்றைய தினம் 13 ஆம் திருத்தச் சட்டம் குறித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இறுதி நிலைபாடு மேற்கொள்ளப்படும் என்று அவர குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு 13 ஆவது திருத்தம் குறித்து தெளிவுபடுத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பயங்கரவாத தடைச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது

### ஐ.தே.கட்சி சாடல்

எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிராக கருத்து வெளியிடும் தரப்பினரை அடக்குமுறைக்கு உட்படுத்த தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.பயங்கரவாதிகளை இல்லாதொழிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பயங்கரவதத் தடைச் சட்டம் தற்போது மாற்றுச் சிந்தனையாளர்களை கட்டுப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈக்களை கொல்வதற்கு கோடாரியை பயன்படுத்தப்படுத்துவதைப் போன்றே தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிடும் தரப்பினர் நான்காம் மாடி அல்லது பலனாய்வுப் பிரிவின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் முக்கிய ஜனநாயக நாடுகளில் ஒன்றாக போற்றப்பட்ட இலங்கை தற்போது சர்வாதிகார நாடாகக் கருதப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.கப்பல் நங்கூரமிடாத துறைமுகங்களும் விமானம் தரையிறங்காத விமான நிலையங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸாரின் வலை வீச்சு; கடந்த வாரம் 185பேர் கைது

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கடந்த வாரம் நடைபெற்ற பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தமும் நீதிமன்றப்பிடியாணையின் பிரகாரமும் 185 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ்நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 110 பேரும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 75 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை இந்தக்காலப்பகுதியில் சாரயம், கசிப்பு, கஞ்சா சம்பந்தமாக ஐந்து வழக்குகள் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பொலிசாரினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் யாழ். பொலிஸ் பிரிவில் அவ்வாறு 12பேர் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் வாகன விபத்து சம்பந்தமாக ஏழுபேர் யாழ். பொலிஸ்பிரிவில் கைது செயயப்பட்டவர்களில் அடங்குவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வெசாக்தினங்களில் எந்தவித குற்றச்செயலகளும் பதிவாகவில்லை இந்த நிகழ்வுகளைக் கண்டு கழிக்க நகரிற்கு வந்திருந்த மக்கள் பாதுகாப்பாக அந்த நிகழ்வுகளை கண்டு கழித்திருப்பதாகவும் இதற்கு பொலிஸார் விசேடமாக பாதுகாப்புச் சேவையை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

## மாத்தளை மனிதப்புதைகுழி விசாரணைக்கு சர்வதேச பொலிஸ்

(கொழும்பு)

மாத்தளை மனிதப்புதைகுழி விசாரணைக்கு சர்வதேசப் பொலிசாரின் உதவி பெறப்படவுள்ளது.

மாத்தளை மனிதப் புதைகுழி விவகார வழக்கு மாத்தளை நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேலதிக விசாரணைகளுக்கென சர்வதேச பொலிஸாரின் உதவியை பெற இரகசிய பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, சர்வதேச பொலிஸாரின் விசாரணையை அடுத்து டி.என்.ஏ பரிசோதனை ஆரம்பிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்ததாக ஜே.வி.பி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு பொதுப்பயன்பாட்டு வழக்கு என்பதால் வழக்கில் பங்குகொள்ள மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பார்களாயின் அவர்களுக்கு அறிந்து கொள்ளும் பொருட்டு சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் பகிரங்க விளம்பரம் வெளியிடுமாறு குற்ற விசாரணை திணைக்களத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது இதேவேளை, இந்த வழக்கிற்கு நேற்றைய தினம் மேலும் 22 சத்திய வாக்குமூல மனுக்கள் சமர்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கிற்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இன்றைய வழக்கு விசாரணையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர் அநுர மெத்தேகொட கலந்து கொண்டதாகவும் ஜே.வி.பி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குற்ற விசாரணை பிரிவினர் வாக்குமூலம் பெற்ற போது மேலும் 6 பேர் முறைப்பாட்டாளர்களாக வழக்கில் இணைந்து கொண்டுள்ளதாக அப்பிரிவு கூறியுள்ளது. இந்த வழக்கு விசாரணையில் சட்டத்தரணிகளான உபுல் குமாரப்பெரும மற்றும் சுனில் வட்டகல உள்ளிட்ட 10 சட்டத்தரணிகள் ஆஜராகியுள்ளதுடன் ஜே.வி.பி. சார்பில் பா.உ அநுரகுமார திஸாநாயக்கவும் சமூகமளித்ததாக ஜே.வி.பி. யின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## தெற்கில் சிவப்பு மழை

யக்கலமுல்லை, நெல்லம்புரே பிரதேசத்தில் பல இடங்களில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சிவப்பு மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியில் நேற்றுமாலை அடைமழைபெய்ததுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் சில இடங்களில் மட்டும் சிவப்பு மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாத இதழ் வெளியீடும் வடக்குமாகாண கல்வி பொருளாதார நிலைகள் தொடர்பான கலந்துரையாடலும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு சிகரம் நிறுவன விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெளிநாட்டுப் பயணத்துக்கான செலவீனத்தில்
75% ஐ மீதப்படுத்துங்கள்!
3 இலட்சம் ரூபாவுடன்.
விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று
தொழில் செய்து பணம் சம்பாதிக்க அரிய வாய்ப்பு!
IELTS, வங்கிப்பண் வைப்பு. தூதரக நேர்முகத் தேர்வு எதுவும் தேவையில்லை
கல்விச் சான்றிதழ். கடவுச்சீட்டுடன் ஜூன் 10க்கு முன்னர் நேரில் வரவும்
* O/L சித்தியடையாதவர்களும் போகலாம்
சிகரம்
153. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
web: www.sikaram.lk
(C/2807)

## கூட்டம்

(கோப்பாய்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் நிறுவன அபிவிருத்திக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கிளை மண்டபத்தில் கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர்கள், பிரிவுத் தலைவர்கள் பிரிவுச் செயலாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு மாவட்ட கிளையின் செயலாளர் க.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (08)



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருக்கும் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு சென் அன்ரனீஸ் வீதியினை புனரமைத்து தருமாறு ஆலய அருட்பணிச் சபையினரால் முன் வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களின் பணிப்பின் பெயரில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினரால் காப்பற்வீதியாக மாற்றம் பெறுவதை மாநகர முதல்வரும் உத்தியோகத்தர்களும் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.